

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 சுறவம் நல்லோரை தைத் திங்கள், 4ம் நாள் (17-01-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## பொங்குவோம் பொங்கவைப்போம்



இம்முறையும் அறம் அறக் கட்டளையின் பொங்குவோம் பொங்கவைப்போம் திட்டத் தில் வடக்கு கிழக்கு மாகா ணங்களில் 850 பொங்கல் பானைகள் மற்றும் பொதி கள் வழங்கி சிறப்பிக்கப் பட்டது.

# யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக நடந்தேறிய மார்கழிப் பெருவிழா

## ஓதுவார்கள், அடியார்கள், கொடையாளர்கள் சிறப்பிக்கப்பட்டனர்



முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக மார்கழிப் பெருவிழா நடைபெற்றது. தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்திய மார்கழிப் பெருவிழா நான்கு அரங்கங்களாக மிகவும் விமரிசையாக நடந்தேறியது. இம்முறை யாழ்ப்பாணத்தில் தொடங்கிய இவ்விழா வரும் காலங்களில் பல இடங்களிலும் நடைபெற இறைவன் திருவருள் கூட வேண்டும்.

மார்கழித் திங்கள் தேவர்களுக்குத் தலைவனான சிவபெருமானுக்கு உரிய சிறப்பு திங்களாகும். அரசனுக்கு உரிய விழாவை ஊரெல்லாம் கொண்டாடுவது போல் தொல் புகழ் கொண்ட சிவபிரானின் விழாவை உலகமே கொண்டாடுகிறது. மானிடர் மட்டுமல்ல, தேவாதி தேவரும் சிவனைக் கொண்டாடும் திருவிழாவே இந்த மார்கழித் திருவிழா எனும் மார்கழிப் பெருவிழா.

திருமுறைகளின் பெருமை, நாயன்மார்களின் வரலாறுகள் அவர்கள் நின்ற சைவ நெறியின் மகிமைகளையும் எங்கள் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக் கூறவேண்டியது எங்களின் தலையாய கடமையாகும். கோயில்கள் வேண்டும், திருவிழாக்களும் வேண்டும், வேள்விகளும் வேண்டும் அத்துடன் மட்டும் நின்றுவிடாது ஞானவேள்வியாகிய திருமுறை முற்றோதல்கள், சைவநெறி சார்ந்த சொற்பொழிவுகள், அனுபவப் பகிர்வுகள் என்பனவும் தற்போதைய காலத்திற்கு ஏற்ப வெளிப்படுத்தப்படவேண்டும்.

சிவபூமியாகிய எங்கள் திருநாட்டில் மீண்டும் சிவ வழிபாடு மிளிரவேண்டும். சிவத்தின் பெருமைகள் எங்கும் பரவவேண்டும். சிவம் என்றால் பயம் என்ற பொய்யான கருத்துரைகள் அழிக்கப்பட்டு, சிவத்தின் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படவேண்டும். அம்பாள், முருகன், பிள்ளையார், பிரமா, இராமர், கிருட்டிணர், பரசுராமர், வாமணர், மச்சன், கச்சன், தேவர்கள் என்று எல்லோரும் வணங்கி சிறப்படைந்த சிவனை நாமும் வணங்க முன்வரவேண்டும். இப்படியான விழாக்கள் மூலம் சைவத்தின், சிவத்தின் தெளிவினை மக்கள் பெறவேண்டும்.

அந்தக் காலத்தில் மன்னர்கள் சிவநெறிக்கு பொருட் கொடைகளை வழங்கியது போல் இந்தக் காலத்தில் பொருள் படைத்தவர்கள் சைவநெறிக்கு அதன் மேன்மைகளுக்கு வாரி வழங்கி வருகின்றனர். அவர்களையும் நாங்கள் கௌரவிக்கவேண்டும் மற்றும் அவர்களின் அறப்பணி வெளிக் கொணரப்படவேண்டும் என்ற அடிப்படியில் இம்முறை மார்கழிப் பெருவிழாவில் சில சைவநெறிக் கொடையாளிகள் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் மேலும் வளரவேண்டும் இவர்களின் அறப்பணி மேலும் சிறக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதரை வேண்டிக்கொள்கிறோம்.




## உத்தரகோசமங்கையில் ஆதிரை அருட்காட்சி மரகத நடராசப் பெருமானின் அற்புதக்கோலம்



தமிழ்நாடு இராமநாத புரத்தில் உலகின் முதல் சிவன்கோயில் என வர்ணிக்கப்படும் உத்தரகோசமங்கை அருள்மிகு மங்களநாதப்பெருமான் திருக்கோயிலில் தனிச் சந்நிதியாக எழுந்தருளியிருக்கும் மரகத நடராசப் பெருமானின் ஆதிரை அருட்காட்சியைக் காண்பதற்கு ஆயிரம் கண்களும் போதாது.

வருடம் முழுக்க சந்தக் காப்பில் இருக்கும் ஆடலரசனுக்கு மார்கழித் திருவாதிரைக்கு முதல் நாள் சந்தனம் களையப்பட்டு அருள்நீராட்டுகள் நடைபெற்று மீண்டும் ஆதிரை அன்று சந்தக்காப்பு இடப்பட்டு ஆதிரை அருட் காட்சியாக அற்புதத் திருக் காட்சியில் ஆடல்வல்லான் அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். இந்தக்காட்சிக் காண தமிழ்நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளியூர்களில் இருந்தும் இலட்சக் கணக்கில் அடியார்கள் வருவார்கள். இந்த திருக்காட்சியை வாழ்வில் ஒருமுறையாவது கண்டு கொள்வது பிறவிப் பயனைத் தரும்.

## திருவண்ணாமலையில் திருவெம்பாவைத் திருவிழா

### திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் மலர் வெளியீடு



சைவநெறி திருக்கூட்டம் குழுவினால், திருமதி.வைத்தியக் கலாநிதி.சு.உமாமகேஸ்வரி அவர்களின் ஒருங்கிணைப்பில் திருவெம்பாவைத் திருவிழா 2021, திருவண்ணாமலை சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமத்தில் மார்கழி 3ம் நாள் இடம்பெற்றது. இந்த விழாவில் ஓய்வுநிலை நீதிபதி திரு.ராமநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த விழாவில் பேராசிரியர்.சிவ சண்முகம் அவர்களின் திருவெம்பாவை விளக்க உரையும் இடம்பெற்றது. அத்துடன் முனைவர் அகரமுதல்வன் எழுதிய திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் என்ற மலரும் மற்றும் திருமதி.கலாநிதி.சு.உமாமகேஸ்வரி அவர்களின்

சித்தத்தை சிவன் பால் வைத்தார் என்ற மலரும் வெளியிட்டுவைக்கப்பட்டன. இரண்டு நாள் நிகழ்வாக இவ்விழா அருமையாகக் கொண்டாடப்பட்டது.

# திரு உலாவு தைத்திங்கள்



சிவத்திரு யாழவன் சிவவேதன்

குளிர்மை நிறைந்த நீர்த்துளிகளால் மண்ணைக் கழுவி, பூமியை நீராட்டிய கார் காலம் தன்னுடைய பிடியை மெல்ல மெல்லத் தளர்த்திக் கொண்டிருக்கிறது. முற்றி வளர்ந்த நெற்கதிர்கள், தம்முடைய ஈரத்தை சூரிய ஒளியில் உலர்த்திவிட்டு அறுவடைக்குத் தயாராகின்றன. கதிரவனையே மறைக்கின்ற ஆற்றல் வாய்ந்த மழைமுகில்களைத் தோற்கடித்துவிட்டு, கதிரோனைக் கண்டால் கலங்கியோடும் பனிமாது ஆட்சியைப் பிடித்துவிட்டாள். தண்மையுடைய மார்கழித் திங்கள் முழுவதும் நீராய் உருக்கும், அமிழ்தினும் இனிய திருவாசகத்தை மட்டும் கேட்டுக்கொண்டிருந்த பொற்பிரம்பேந்திய புண்ணியனின் தலைவன் ஏனைய திருமுறைகளையும் மீண்டும் கேட்கத்தொடங்கிவிட்டான்.

இன்னும் சொல்லப்போனால் மாந்தர்களுள் சிலர் மிகுந்த பூரிப்புடனும், மகிழ்ச்சியுடனும் களித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேறுயாருமல்ல, மண்ணைப்பெண்ணாக்கி தையலைக் காதலித்து அவளோடு இணைந்து வாழ்வு நடாத்தி, பயிர்கள் என்னும் குழந்தைகளைப் பெற்றெடுத்து அக்குழந்தைகளின் முதிர்வுக்காக காத்துக் கொண்டிருக்கும் ஏரேந்திய உழவர்கள்தான்

**“அருந்தின ரருந்திச் செல்ல அருந்துகின் றாரு மாங்கே**
**இருந்தினி தருந்தா நிற்க இன்னமு தட்டுப் பின்னும்**
**விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி**
**வருந்திவிண் ணோக்க மோரே உழவர்போல் வாழ நிற்பார்.”**

மேற்கூறிய பாடலில் உழவர்களின் சிறப்பினைப் பரஞ்சோதி முனிவர் தன்னுடைய திருவிளையாடற் புராணத்ினூடாக முரசறைந்து போகின்றார். விருந்தினர்கள் விருந்தை சுவைத்து உண்டு மகிழ்ந்துவிட்டுச் செல்ல, விருந்து உண்டுகொண்டிருக்கின்றவர்களும் மகிழ்வாக உண்ண விருந்துண்ண வருபவர்களுக்காக வயலில் விதையை விதைத்துவிட்டு மழையை எதிர்நோக்கி வான் பார்த்துக் காத்திருக்கின்றார்கள் உழவர்கள் என்று காட்சி விரிக்கின்றார் பரஞ்சோதியார், உணவுண்ட, உணவுண்ணுகின்ற, உணவுண்ணப்போகின்ற மூவருடைய நலனையும் கருத்திற்கொண்டு உழவுத்தொழில் செய்வதனாலன்றோ,

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்.”**



என்று வள்ளுவப் பெருமகனார் அறைகூவல் விடுத்தார். இதற்கு சற்றும் சளைக்காமல் தெய்வச்சேக்கிழாரும் உழவின் பெருமையினை ஓங்கி. உரைத்துப் போகின்றார்.

**“விழவு அறாதன விளங்கு ஒளிமணி நெடுவீதி**
**முழவு அறாதன மொய்குழலியர் நடஅரங்கம்**
**மழவு அறாதன மங்கலம் பொலிமணிமுன்றலில்**
**உழவு அறாத நல்வளத்தன ஓங்கு இருங்குடிகள்.”**

பெரிய புராணத்தின் வம்பறாவரி வண்டுச் சருக்கத்துள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்துள் சேக்கிழார் இயம்பிச் சென்ற பாடல்தான் மேற்படி பாடல். அந்த நகரின் வீதிகள் விழாக்களை விட்டு நீங்காமல் இருந்தன. அடர்ந்த கூந்தலுடைய பெண்களின் நட அரங்கம் முழவு ஒலியை விட்டு நீங்காது இருந்தது. அவ்விடத்தின் முற்றங்கள் சிறார்களை நீங்காது இருந்தது என்று சொல்லிவிட்டு அக்குடிகள் வளம்வாய்ந்த உழவுத்தொழிலை நீங்காது இருந்தன என்று இயம்புகிறார் தொண்டர் சீர்பரவிய செம்மையாளர். இத்தகு உழவுத்தொழிலின் இன்றியமையாத காலமே தைத்திங்கள் அறுவடைக்கு உதவிய கதிரவனுக்கு நன்றிசெலுத்துதல், வாழ்வியல் துணைபுரிந்த ஆவினங்களுக்கு நன்றி செலுத்துதல் மற்றும் செவ்வேளின் அருள் வேண்டி தைப்பூசத்தில் அவனை வழிபடல் போன்றன இத்திங்களின் இன்றியமையாத நிகழ்வுகளாகும்.

**“தைஇத் திங்கள் தண்கயம் படியும்” என்று நற்றிணையும்**
**“தைஇத் திங்கள் தண்ணிய தரினும்” என்று குறுந்தொகையும்**
**“தைஇத் திங்கள் தண்கயம் போல” என்று புறநானூறும் ஐங்குறுநூறும்**
**“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ” என்று கலித்தொகையும்.**

தைத்திங்களின் சிறப்புகளைக் கூறிச் செல்கின்றன. இதற்கு அப்பாலும் சான்றுகளைத் தேடின் தமிழ் தழைத்தோங்க. சைவம் பொலிவு பெற தென்திசை உய்ய வந்துதித்த செந்தமிழ்ஞான சம்பந்தரின் பூம்பாவாய் பதிகம் தக்க ஆதாரமாய் அமைகின்றது.

**“மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்**
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சர மமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்”**

நெய்ச்சோறு படைத்துக் கொண்டாடும் தைப்பூசம் காணாது. போவாயோ பூம்பாவாய் என்று விளம்புகின்றார் உலகுய்ய அழுத தவமுதல்வர். ஈழத்து இலக்கியங்களுள் ஒன்றான சரசோதி மாலையும்.

**“திரு உலாவு தைத்திங்கள் பூசநாள்**
**மருவு பூரணையின் மகிழ்ந்து யாவரும்**
**பொருவிலாத புதியது அருந்திடிற்**
**பெருகு தானியம் பாவும் பெருவரே”**

என்று தைத்திங்களைப் புகழ்ந்து சான்றுபடுத்திப் போகின்றது ஆகவே யாமும் தமிழர் தம் தலையாகிய திருநாளாகிய தைப்பொங்கலையும் அதற்கு பின்னர் வரும் பட்டிப்பொங்கலையும், தைப்பூசத்தையும் தைப்பொங்கலுக்கு முதல்நாள் கொண்டாடப்படும் போகிப் பொங்கலையும் கொண்டாடி மகிழ்வதோடு, உலகிலுள்ள அனைத்து மக்களும் இன்புற்று இருக்கவும், ஏர்வளம் பெருகவும், நீர் வளம் பொழியவும், நிலவளம் சிறக்கவும் கதிரவனையும், அருக்கனில் சோதி அமைத்த அண்ணலையும் போற்றி வழிபடுவோம்.

**“பட்டி பெருக வேணும் தம்பிரானே**
**பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே**
**மேழி பெருக வேணும் தம்பிரானே**
**நாடு தழைக்க வேண்டும் தம்பிரானே**
**நல்ல மழை பெய்ய வேண்டும் தம்பிரானே**
**ஏர் தழைக்க வேண்டும் தம்பிரானே**
**எல்லோரும் வாழ வேணும் தம்பிரானே.”**

## சைவ மாணவர் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் சிவத்திரு.மு.ஜோதீஸ்வரன் புதிய தலைவராக தெரிவு



சைவ மாணவர் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டமானது, 14/01/2022 தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் நடைபெற்றது. கூட்டமானது சிவத்திரு.சஜீவன் அவர்களின் உரையுடன் ஆரம்பமாகி தொடர்ந்தது. பின்னர் புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப் பட்டது. சிவத்திரு. சஜீவன் அவர்கள், உத்தியோகபூர்வமாக தன்னுடைய பதவியை புதிய தலைவரிடம் கையளிக்க, சபையின் புதிய தலைவராக சிவத்திரு.மு. ஜோதீஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்.

**புதிய நிர்வாகக் குழு விபரம்**

தலைவர் - சிவத்திரு.மு.ஜோதீஸ்வரன்
துணைத் தலைவர் - சிவத்திரு.அ.லதாங்கன்
பொதுச் செயலாளர் - சிவத்திரு.வ.சசிராஜ்
நிர்வாகச் செயலாளர் - சிவத்திரு.ஜீ.சஜீவன்
பொருளாளர் - சிவத்திரு.தி.கௌரீசன்
துணைப் பொருளாளர் - சிவத்திரு.கஜீபன்
ஒருங்கிணைப்பாளர் - சிவத்திரு.வி.நிலவன்

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில், சைவ மாணவர் சபையின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும், யாப்புச் சீர்திருத்தம் பற்றியும் பேசப்பட்டது. புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கான நடைமுறைகளும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு திங்கள் முழுமதி நன்னாளில் சைவ மாணவர் சபையின் மாதாந்த நிர்வாகக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ் மரபுத் திங்கள் - தை!



தமிழரின் முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் ஞாயிறையும் மாமழையையும் போற்றுகின்றார். இலக்கியங்கள் மக்கள் வாழ்வைக் காட்டும் கண்ணாடிகள். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழினம் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த மரபைக் கொண்டது. ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது தமிழர்களின் ஆழமான நம்பிக்கை.

தை மாதம் தமிழர் வாழ்வியலில் மிகவும் முக்கியமான மாதமாகும். கதிரவனின் கதிர்க் கரங்களால் நெற்கதிர்கள் பொலிந்து அறுவடை செய்யும் மாதம். தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் மாதம். உழவர்கள் உளம் மகிழ்ந்து தைப்பொங்கலைக் கொண்டாடி இயற்கைக்கும் விலங்குகளுக்கும் நன்றி கூறும் மாதம். உறவுகள் கூடிப் பகிர்ந்து உண்டு களிக்கும் மாதம். தமிழர் கலைகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் களைகட்டும் மாதம்.

தமிழரின் கடவுளாகப் போற்றி வழிபடப்படும் முருகனிற்கு தைப்பூச விழா ஆலயங்கள் தோறும் கொண்டாடப்படுகிறது. சோழமன்னன் தைப்பூசத்தையொட்டி ஆலயத்தில் கூத்துக்கள் நடாத்தியதாக கல்வெட்டு கூறுகின்றது. மொத்தத்தில் தமிழர்களின் உயரிய பண்பாட்டையும் கலாசாரத்தையும் கலைகளையும் வழிபாட்டு முறைகளையும் போற்றும் மாதமாகத் தைத் திங்கள் திகழ்கிறது.

இத்தகு சிறப்புமிக்க தை மாதத்தை நியூ சவுத் வேல்ஸ் வாழ் தமிழர்கள் பல வருடங்களாகக் கொண்டாடி வருகின்றனர். இவர்களே அவுஸ்திரேலியாவின் முதலாவது திறந்த வெளிப் பொங்கல் விழாவை 2012ஆம் ஆண்டு கொண்டாடிய பெருமையைஉடையவர்கள்.

மாநிலத்தின் பல பகுதிகளிலும் தற்போது பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ் விழாக்களில் தமிழர் கலைகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் முக்கியம் பெறுகின்றன. நீண்ட கோடை கால விடுமுறை என்பதால் எமது இளம் சந்ததியினர் இவ்விழாக்களில் அதிக பங்களிப்பை நல்குகிறார்கள். தமது பாரம்பரியத்தைத் தெரிந்துகொள்கிறார்கள். சிட்னியிலுள்ள மாநிலத்தின் பாராளுமன்றத்திலும் கன்பராவிலுள்ள அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்திலும் பொங்கல் விழாவினை நியூ சவுத் வேல்ஸ் தமிழர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். தை மாதத்தின் இறுதியில் இனத்தின் விடிவுக்காக இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரனை நினைவு கூர்ந்து பெரிய அளவில் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்று வருகின்றது. இதில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்து ஆலயங்களில் தைப் பொங்கல் தினத்திலும் தைப்பூசத் தினத்திலும் சிறப்பு வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

எமது எதிர் காலச் சந்ததிக்கு எமது பண்பாட்டையும், கலாசாரத்தையும், கலைகளையும், விழுமியங்களையும், பாரம்பரிய விளையாட்டுகளையும் கற்றுக் கொடுக்கவும் கையளிக்கவும் எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் தைத் திங்கள் ஆகும். இதை உணர்ந்து தமிழர் மரபுத் திங்களை நன்கு திட்டமிட்டு அவுஸ்திரேலியத் தமிழர்கள் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும்.

**தமிழ் வாழ நாம் வாழ்வோம்!**
**நாம் வாழத் தமிழ் வாழும்!!**

**கதிர்காமநாதன், நரேந்திரநாதன்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்

## அருள்மிகு வேற்கண்ணியம்மன் உடனுறை அருட்டுறைநாதர் (கிருபாபுரீசுவரர்) திருக்கோயில் - திருவெண்ணெய்நல்லூர் (திருவருட்டுறை)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 225வது திருக்கோயில் - திருவெண்ணெய்நல்லூர்)



சுந்தரரின் அருள் வாழ்விற்கு இடமான தலம், வழக்கிட்டு, ஆரூரரை வலியவந்து ஆட்கொண்ட தலம். "நின் வருமுறை மணியும் நீடுவாழ்க்கையும் காட்டுக" என்று கேட்டவருக்கு, "என் இருப்பிடம் இதுவே" இறைவன் காட்டிய திருக்கோயிலை உடைய பதி! 'தருமதேவதை' என்று புகழ்பெற்ற சடையப்ப வள்ளலின் பதி. சைவசித்தாந்த சாத்திரங்களில் தலையாயதான 'சிவஞானபோதம்' நூலை அருளிச் செய்த மெய்கண்டதேவர் வாழ்ந்து உபதேசம் பெற்ற ஊர். வேதியராய் வந்து ஆரூரரை தடுத்தாட்கொண்ட தலம் இது.

**அமைவிடம் : விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு**

விழுப்புரத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் இருப்புப்பாதையிலும், விழுப்புரத்தில் இருந்து அரசூர் செல்லும் வழியில் 19 கிலோமீட்டர் தூரத்தில் திருவெண்ணெய்நல்லூர் அமைந்துள்ளது. இத்தலத்தின் அருகில் அப்பரின் பாடல்பெற்ற திருத்தலமான திருமுண்டீசுவரம் சிவலோகநாதர் திருக்கோயிலும் அமைந்துள்ளது.

**இறைவர் திருப்பெயர் : அருட்டுறை நாதர்(கிருபாபுரீசுவரர்), வேணுபுரீசுவர், அருட்டுறை நாதர், தடுத்தாட்கொண்ட நாதர்**
**இறைவியார் திருப்பெயர் : வேற்கண்ணியம்மை(மங்களாம்பிகை)**
**கோயில் மரம் : மூங்கில் மரம்**
**தீர்த்தம் : தண்டுத்தீர்த்தம்,(சிவனாற்கேணி), பெண்ணை நதி தீர்த்தம், நீலி தீர்த்தம், சிவகங்கா தீர்த்தம், காம தீர்த்தம், அருட்டுறைத் தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம், வேத தீர்த்தம்**
**வழிபட்டோர் : சுந்தரர், அப்பர், சேக்கிழார், வேதங்கள், திருமால், வேதன், ஷண்முகன், விஜயன், சுந்தரமூர்த்தி நாயனார், கம்பர், மெய்கண்டார்**
**பாமாலை : சுந்தரர், அப்பர், சேக்கிழார்**

### நாயன்மார்களால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

### சுந்தரரால் பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

**பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்**
**அத்தா உனக்கு ஆளாய் இனிஅல்லேன் எனலாமே - சுந்தரர் 7-1-1**

**காரூர் புனல் எய்திக்கரை கல்லித் திரைக்கையால்**
**பாரூர் புகழ் எய்தித் திகழ் பன்மாமணி யுந்திச்**
**சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர்அருட்டுறையுள்**
**ஆரூரன் எம் பெருமாற்காளல்லேன் எனலாமே - சுந்தரர் 7-1-10**

### திருநாவுக்கரசரால் பாடப்பட்டது

**சீரார் புனற்கெடில வீரட்டமுந்**
**திருக்காட்டுப் பள்ளி திருவெண்காடும்**
**பாரார் பரவுஞ்சீர்ப் பைஞ்ஞீலியும்**
**பந்தணை நல்லூரும் பாசூர்நல்லம்**
**நீரார் நிறைவயல்சூழ் நின்றியூரும்**
**நெடுங்களமும் நெல்வெண்ணெய் நெல்வாயிலுங்**
**காரார் கமழ்கொன்றைத் தாரார்க்கென்றுங்**
**கடவூரில் வீரட்டங் காப்புக்களே.**

சேக்கிழாரின் தடுத்தாட்கொண்ட புராணத்தில் பாடப்பட்டது.

**என்றலும் நின்ற ஐயர்,**
**"இங்குளேன் இருப்புஞ் சேயது அன்றிந்த வெண்ணெய் நல்லூர்**
**அதுநிற்க அறத்தாறு இன்றி வன்றிறல் செய்து என்கையில்**
**ஆவணம் வலிய வாங்கி நின்றிவன் கிழித்துத் தானே**
**நிரப்பினான் அடிமை"** என்றான்

### திருத்தலச் சிறப்பு

சிவபெருமானின் திருப்பாதம் பதிந்த பெரும் புனிதமான புராதனமான திருத்தலம், திருவெண்ணெய்நல்லூர். சிவபெருமானின் அணுக்கத்தொண்டராக இருந்த சுந்தரரை பூவுலகம் சென்று, காதல் வாழ்க்கையை முடித்து வர கூறி அனுப்பினார். ஆனால் திருமணத்தில் ஆட்க்கொள்ளவதாகவும் கூறியனுப்பினார்.

சுந்தரருக்கு கொடுத்த வாக்கின்படி, அவரை தடுத்தாட் கொள்ள வேண்டிய தருணம் சிவபெருமானுக்கு வந்தது. அதன்படி திருமணம் நடைபெற இருந்த இடத்திற்கு ஓர் அந்தணக் கிழவராக உருவெடுத்து வந்தார் சிவபெருமான். அங்கு கூடியிருந்தவர்கள் முன்னிலையில் நம்பி ஆரூரரை காட்டி, **"இவன் என் அடிமை. இவனை என்னோடு அனுப்புங்கள். மணம் செய்து வைக்காதீர்கள். இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலையில், அவனும், அவனது வழிவழி சந்ததியினரும் இந்த திருவெண்ணெய் நல்லூர் அந்தணனுக்கு அடிமை"** என்று கூறியதோடு, அதற்கான ஓலையையும் காட்டினார்.

அதைக் கேட்ட சுந்தரர், **"உமக்கு என்ன பித்து பிடித்திருக்கிறதா?"** என்று கேட்டவாறே, முதியவரின் கையில் இருந்த அடிமை ஓலையை பிடுங்கி, படித்துக்கூட பார்க்காமல் கிழித்து எறிந்தார். முதியவருக்கும், சுந்தரருக்கும் வழக்கு மூண்டது. **"இங்கே எனக்கு நீதி கிடைக்காது. எனது ஊரான திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்வோம். அங்கு வழக்காடு மன்றத்தில் மறையோர்கள் முன்னிலையில் உண்மையை நிரூபிக்கிறேன்"** என்று கூறி சுந்தரரை தன்னுடன் அழைத்துச் சென்றார் முதியவர்.

சுந்தரரோ, **"அப்படியோர் வழக்கு இருக்குமெனில், அதை முடித்த பின்னரே இங்கு வந்து மணம் முடிப்பேன்"** என வாக்கு இட்டு முதியவருடன் சென்றார். பின்னர் வழக்கு திருவெண்ணெய்நல்லூரில் மறையவர்கள் முன்னிலையில் நடந்தது. அப்போது சுந்தரரின் பாட்டனார் கையெழுத்திட்ட பழைய ஓலைச் சுவடிகளை கொண்டுவந்து சரிபார்த்தனர். முதியவர் காண்பித்த அடிமை ஓலைச் சுவடியில் உள்ள சுந்தரரின் பாட்டனார் கையெழுத்தும், இதுவும் பொருந்திப்போயின. எனவே அங்கிருந்த மறையவர்கள், சுந்தரரை அந்த முதியவருக்கு அடிமை என தீர்ப்பளித்தனர்.

இதனால் வழியின்றி அந்த முதியவருடன் சென்றார், சுந்தரர். வழியில், **"ஐயா.. என்னை எங்கு அழைத்துச் செல்கிறீர்? உமது வீடு எங்கு இருக்கிறது?"** என வினவினார். உடனே அந்த முதியவர், **"அன்பனே! நமது வீடு அதோ இருக்கிறது"** என திருவெண்ணெய்நல்லூர் கோயில் அருட்துறையை கைகாட்டி அழைத்துச் சென்றார்.

சுந்தரருக்கு ஒன்றும் புரியவில்லை. **"ஐயா.. அங்கே தெரிவது திருவெண்ணெய்நல்லூர் கோயில் அல்லவா? நான் கேட்டது, உமது வீடு எங்கிருக்கிறது என்றுதானே"** என்றார் சுந்தரர். முதியவர் வேடத்தில் வந்த சிவபெருமான் மீண்டும் திருவெண்ணெய்நல்லூர் கோயில் அருட் துறையை கைகாட்டி, சுந்தரரை கோயில் கருவறைக்குள் கைப்பிடித்து அழைத்துச் சென்றார். அங்கு சிவலிங்கத்திற்கு முன்பாக தமது பாதக் குறடுகளைக் கழற்றி விட்டுவிட்டு, சிவலிங்கத்திற்குள் சென்று மறைந்தார், முதியவர். சுந்தரர் திகைப்பில் ஆழ்ந்து போனார். அப்போது கருவறைக்குள் இருந்து சிவபெருமான் தோன்றி, சுந்தரரின் முற்பிறவியையும், இப்போதைய பிறவியையும் பற்றி விளக்கிவிட்டு மறைந்தார். இதையடுத்து சிவபெருமானின் மீது, **"பித்தா பிறை சூடி.."** என்ற தன்னுடைய முதல் பதிகத்தை பாடினார் சுந்தரர்.

சுந்தரருடன் பஞ்சாயத்துச் சபையில் ஈசன் வழக்காடிய மண்டபம் இன்றும் திருவெண்ணெய்நல்லூரில் உள்ளது. தீராத வழக்குகளில் வெற்றி கண்டிட இத்தல வழிபாடு பெரிதும் கைகொடுக்கும் என்கிறார்கள். சடையப்ப வள்ளல், கவிச்சக்கரவர்த்தி கம்பரை ஆதரித்துப் போற்றிய பவித்திரமான புண்ணியபூமி இதுவாகும். சந்தான குரவரான மெய்கண்டார், 'சிவஞான போதம்' அருளிய திருத்தலமும் இதுதான்.



சுந்தரரை ஆட்கொள்ள வந்த
சிவன் அணிந்து வந்த பாதணிகள்



மெய்கண்டாருக்கு அவரது ஐந்தாம் வயதில் ஞான உபதேசம் செய்த பொல்லாப் பிள்ளையார் இங்கு அருள்கிறார்.

இத்தல வேற்கண்ணி அம்மன்(மங்களாம்பிகை) சன்னிதியில் வழிபட செல்வம், வீடு, வாசல், கல்வி, நன்மக்கட்பேறு, நீண்ட ஆயுள் அனைத்தும் கிடைக்கும். இங்கு அம்பாள் சன்னிதியில் யந்திரம், சங்கநிதி, பதுமநிதி அமைந்துள்ளது சிறப்பாகும். அறுபத்து மூவர், ஏழுமங்கையர் சன்னிதிகளும் உள்ளன. இத்தல ஈசனின் திருப்பெயர் அருட்டுறை நாதர் (கிருபாபுரீசுவரர்) என்பதாகும். சுந்தரரை தடுத்தாட் கொள்ள ஈசன் வந்தபோது அணிந்திருந்த பாதக்குறடுகள் இன்றும் இங்கு உள்ளது. இத்தல இறைவனுக்கு 'தடுத்தாட்கொண்ட நாதர்' என்ற பெயரும் உண்டு.

### திருத்தல வரலாறு

தாருகாவனத்து முனிவர்கள் அகந்தையால் வேள்வி இயற்றி சிவபெருமானைக் கொல்ல ஏவினர்.அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை எல்லாவற்றையும் சிவன் தன்னிடத்தே பெற்றுக் வைத்துக் கொண்டார். முனிவர்கள் தங்கள் அகந்தை அழிந்து இத்தலத்தில் தவம் புரிந்தார்கள். இறைவன் அவர்களது தவறை பொறுத்து அருள் புரிந்தார். எனவே இக்கோயில் அருட்டுறை (அருள் துறை) எனப்பெயர் பெற்றது. முனிவர்களின் தவறை எண்ணி இங்கு இறைவன் கிருபை புரிந்ததால் கிருபாபுரீசுவரர் எனப்பெயர் பெற்றார். மறைகள் இறைவன் ஆணைப்படி இங்கு தவம் புரிய அவற்றின் நடுவில் இறைவன் தீயுருவாகத் தோன்றினான் அவை கேட்டுக் கொண்டபடி இங்கு தான்தோன்றி இலிங்கமாக எழுந்தருளினான்.

### திருக்கோயில் பூசைகளும் அமைப்பும்

இராசகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. கோபுரம் கடந்து உள் நுழைந்ததும் சுந்தரர் வழக்கு நடந்த 'வழக்குத் தீர்த்த மண்டபம்' வழக்கு வென்ற அம்பலம் உள்ளது. அடுத்து, செப்புக் கவசமிட்ட கொடிமரம், முன்னர் கொடி மர விநாயகர், பலிபீடம் உள்ளன. மேலே சுந்தரருக்கு இறைவன் இடப வடிவினராகக் காட்சி தந்த விமானக் கோயில் உள்ளது. அதற்கு எதிரில் கீழே சுந்தரர் சன்னிதி உள்ளதையும் காணலாம். (இவ்வுருவத்தில் சுந்தரர் கையில் ஓலையுடன் காட்சியளிக்கிறார்).

கல் மண்டபத்தில் அறுபத்துமூவர் மூலத்திருமேனிகள் வரிசையாகவுள்ளன. நேரே சோமன்கந்தர் சன்னிதி. பக்கவாயில் வழியாக உட்சென்றால் மூலவர் சன்னிதி. எதிரில் சாளரம் உள்ளது. மூலவர் அழகான சிவலிங்கத் திருமேனி. வெளிச்சுற்றில் அறுபத்துமூவர் திருமேனிகளையடுத்து வரிசையாக எழுமங்கையர்களும், சம்பந்தர், திருமால், அருணந்தி சிவம், மெய் கண்டதேவர் திருமேனிகளும் உள்ளன.

உள்ளே விநாயகர், சுப்பிரமணியர் சன்னிதிகள், வேழத் திரு(கஜலட்சுமி) சந்நிதி, உள்ளன. கோட்ட மூர்த்தங்களாகப் பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், திருமால், மலைமகள் ஆகியோர் உள்ளனர். சண்டேசுவரர் சன்னிதி உள்ளது. வேற்கண்ணியம்மை கோயில் இடப்பால் உள்ளது. நின்ற திருக்கோலம். பள்ளியறை உள்ளது. உட்புறத் தூண்களில் பைரவர், தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் உள்ளன. மெய்கண்டாரின் சமாதி, வடக்கு வீதியின் கோடியில் உள்ளது. சடையப்ப வள்ளலின் இல்லம் வடக்கு வீதியில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

நாடொறும் நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன. அண்மையில் உள்ள தலங்கள் திருமுண்டீச்சுரமும், திருநாவலூரும் ஆகும். பங்குனி உத்திரம், ஆடி சுவாதி முதலிய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடி சுவாதி உற்சவத்தில் திருமண உற்சவம், திருமணத்தைத் தடுத்தது, சுந்தரருக்குக் காட்சி கொடுத்தது முதலிய ஐதீகங்கள் நடைபெறுகின்றன. சுந்தரர் உற்சவத் திருமேனி கண்டு தொழத்தக்கது.


**"நல்லூர் அருட்டுறையுள் அத்தா போற்றி"**

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்
nilavan@thennadu.org

தென்னாடு

சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# புதிய விழவு பிறக்கட்டும்!

‘தைத்திருநாள் இல்லமெல்லாம் தளிர்த்திடும் பொங்கல் இத்தனை நாள் காத்திருந்தோம் இனிய தமிழ் பொங்கல்!’ என்று நாம் எல்லோரும் தைத்திங்களின் பிறப்பை கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றோம். சூரியப்பொங்கலாக, பட்டிப் பொங்கலாக, காணும் பொங்கலாக இந்தப் பண்டிகை நீண்டு நிறைந்திருக்கின்றது! ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது எமது நம்பிக்கை!

வயலை உழுது பண்படுத்தி, நீர் இறைத்து, காத்திருந்த அறுவடை நாளாக இந்த தைப் பிறப்பு எமக்கு நம்பிக்கை ஒளியைத் தரும் என்ற ஒருமித்த சிந்தனை எங்கள் அனைவரது உள்ளங்களிலும் துளிர்விடும் காலம் இந்த தைத்திங்கள் காலம்!

உலக உயிர்ப்பின் மூலமுதலான சூரியனை ஏற்றிப் போற்றவும், அவன் வெம்மை தவிர்த்து எம்மைக் காக்கும், திறம் வியந்து வழிபடவும், நன்றிக்கடன் செலுத்தும் நாளாகவும் நாம் இதனை கொள்வது வழி வழி வந்த தமிழர் நடைமுறையாகும். நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட ஒரு இனத்தின் நன்றி கூறும் மனப்பாங்கு இயற்கை மீதும் இருந்தது என்பதற்கு இந்த ஒரு நடைமுறையே சான்றாகும். எனவே தான் உலக நாகரிகத்தின் உன்னதம் என்று தமிழர் நாகரிகத்தை கற்றறிந்த வர்கள் ஏற்றிப் போற்றுவார்கள்!

இயற்கை வழிபாடு, கிராமியத்தெய்வ வழிபாடு என்பவற்றைக் கடந்த பெருந்தெய்வ வழிபாடு இன்று பல்கிப் பெருகிவிட்டாலும் கூட ஆதியில் இருந்த இயற்கை வழிபாட்டு நடைமுறையாகவே சூரியப் பொங்கலை நாம் நோக்க வேண்டும்! சூரியனால் தான் நீர் ஆவியாகிறது. அந்த நீர் மேகத்தில் நிறைந்து மழையாகப் பொழிகிறது. மழை இந்த மண்ணையும் மக்களையும் மகிழ வைக்கின்றது! பசிப்பிணி மறைகின்றது.

“விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்ளின்று உடற்றும் பசி” என்கிறான் வள்ளுவன்!

இந்தப் பழமையான தொடர்ச்சியை எமது அடுத்த தலை முறைக்கும் கடத்த வேண்டிய பெரும்பொறுப்பு எம்மத்தியில் இருக் கின்றது. காலமாற்றம் எம் உறவுகளை, இந்த நிலத்திலும் கடல்தாண்டிய புலங்களிலும் தூக்கி வீசி இருக்கின்றது!

இந்த மண்ணில் பண்பாட்டுக் கடத்துகை மிக எளிமையாக நிகழ்ந் தாலும், புலம்பெயர்தேசங்களில் அந்தக் கடத்துகைக்குப் பெரும் தடைகள் இருப்பது நாம் அனைவரும் உணர்ந்ததே! வாசலில் சாணத்தால் மெழுகி கோலம் போட்டு கரும்பு கட்டி. மண் அடுப்பு வைத்து புலம்பெயர் தேசங்களில் பொங்கல் நிகழ்த்த முடியாது. மேலும் பொங்கல் அன்று அங்கு விடுமுறை கூட இல்லை! இந்த மட்டுப்பாடுகளுக்குள்ளன்று கொண்டும், கிடைப்பனவுகளுக்கு ஏற்றது போல பொங்கி மகிழ்ந்து, தம் இளைய பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கும் பெரும்பாலான புலம் பெயர் உறவுகளின் பணி போற்றுதற்குரியது!

ஆனாலும் எங்கள் இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளைத் தாண்டி, மத்திய மலையகத்திலும், புத்தளம், பொலன்னறுவை, காலி போன்ற பெரும்பான்மை சமூகத்தவர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் வாழும் தமிழர்கள் பொங்கல் பண்டிகையை கொண்டாட முடியாமல் தவிர்ப்பதை நாம் அவதானிக்கின்றோம்! ஏழ்மையும், பண்பாடு குறித்த கரிசனை இன்மையும் இதற்கு காரணம் எனலாம்.

எனவே தான், “பொங்குவோம் பொங்க வைப்போம்” என்கிற உற்சாகக் குரல்களோடு பல அமைப்புக்கள் பொங்கல் பானைகளையும் பொங்குவதற்குரிய பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கி எம் உறவுகளை அரவணைத்தனர்!

ஒருவர் பலருக்காக, பலர் ஒருவருக்காக என்ற உதவிடும் எண்ணக் கருவின் உயர்ந்த நிலையை நாம் கண்டோம்! இந்த பரோபகார மனப்பாங்கு எம்மத்தியில் உயர்ந்தால், அற்றிய சக்திகளின் இனமாற்ற கபட தந்திரங்களில் இருந்து எம்மையும் எம் சுற்றத்தையும் நாம் காத்துக்கொள்ளலாம்! எனவே பிறந்திருக்கின்ற தைத்திங்கள் புதிய நல்ல நம்பிக்கைகளையும் ஒன்றாக்கி கொண்டே பிறந்திருக்கின்றது என்போம்!

“தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்!
ஆடியிலே வெதை வெதைச்சோம் தங்கமே தங்கம்
ஐப்பசியில் களையெடுத்தோம் தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கழனியெல்லாம் பொன்னாச்சு தங்கமே தங்கம்!”

என்ற கவிஞர் ஏ. மருதகாசி அவர்களின் பாடல் வரிகளைப் போலவே, பஞ்சம் தீர்ந்து கதிர் விளைந்து, தானியமும், தனமும் நிறையும் தைத் திங்களை நாம் எல்லோரும் மகிழ்வுடனும் நன்றியுடனும் வரவேற்போம்! கடந்த இரு ஆண்டுகளாக எம்மை ஆட்டுவிக்கும் கொடிய “கொரோனா” பெரும் தொற்றில் இருந்து முழுமையாக நாம் வெளியில் வரவும், உலகம் புதியவிடிவை நோக்கிப் பயணிக்கவும் எல்லாம் வல்ல ஆடல்வல்லானின் அருட்பார்வை இந்த வையகத்தின் மீது படவும், உழவும் தொழிலும் சிறந்து ஓங்கவும், பசியும் பஞ்சமும் பாரினில் ஒழியவும், பாடுபடும் மக்களின் வாழ்வு பயன்பெற்று உய்யவும் உயிர் முதலான சூரியனிடம் விண்ணப்பம் வைத்து வணங்குவோமாக!

“தூயவர் இதயம் போல துலங்கிடும் ஒளியே போற்றி,
தூரத்தே நெருப்பை வைத்து சாரத்தைத் தருவாய் போற்றி
ஞாயிறே நலமே வாழ்க நாயகன் வடிவே போற்றி
நாநிலம் உளநாள் மட்டும் போற்றுவோம் போற்றி போற்றி”

திருச்சிற்றம்பலம்



# முதன்முறையாக ஓதுவார்கள் சிறப்பிக்கப்பட்டனர்; மூத்த ஓதுவாருக்கு தென்னாடு மடத்தினால் திருவடிபூசை

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் சார்பாக முன்னெடுக்கப்பட்ட மார்கழிப் பெருவிழாவானது மிகச் சிறப்பாக நடைபெற்றது. நால்வர் காட்டிய நெறிகளை விரித்துரைக்கும் வண்ணமாக நான்கு அமர்வுகளாக இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வின் இரண்டாவது அமர்வில் “ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு” என்னும் நிகழ்வு இடம்பெற்றது. “பண்ணார் இசையின் சொல் கேட்டாய் போற்றி” என்பது திருமுறை. அப்பேற்பட்ட சிறப்புமிக்க ஓதுவார்களை பெருமைபடுத்தும் விதமாக பாழ்ப்பாணத்தில் முதன்முறையாக இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பண்ணொடு தமிழை பரமன் செவிக்கு பாய்ச்சும் பணியினை மேற்கொண்ட ஓதுவார்களில் தலைமை ஓதுவாராக, அனுபவ முதிர்வு கொண்ட அளவெட்டியைச் சார்ந்த ஓதுவார் சிவத்திரு. வே.க. நடராசா அவர்களுக்கு அனைத்து ஓதுவார்களையும் சிறப்பிக்கும் வண்ணம் திருவடி பூசை இயற்றி தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மகிழ்ந்தது.

அதன்பிறகு அனைத்து ஓதுவார்களின் பதம் பணிந்து, ஒவ்வொருவருக்கும் பொற்கிழி, திருநீற்றுப்பை மற்றும் நினைவு வேல் ஒன்றும் அன்பாக வழங்கப்பட்டது.காண்போர் யாவரும் மகிழும் வண்ணம், கண்ணுதல் பெருங்கடவுளின் கருணையால் நடைபெற்றது. இந்நிகழ்வில் அடியார்கள், சைவ ஆன்றோர்கள், அரச அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அதன்பிறகு இந்நிகழ்வைப் பற்றி குறிப்பிட்ட ஓதுவார்கள் மிகவும் மனம் மகிழ்ந்ததெனவும், இதுபோன்ற நிகழ்வு இப்போதுதான் நடந்திருக்கின்றது என்றும் கூறினர்.சைவத் திருமுறைகளை மீட்டெடுத்ததில் ஓதுவார்களின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.ஓதுவார் ஒருவரின் தேவாரப் பாடலைக் கேட்ட பின்தான் இராசராச சோழன் திருமுறையின்கண் தன் கவனத்தைத் திருப்பினான். அப்பேற்பட்ட ஓதுவார் பெருமக்களைப் பேணுவது சைவர்களாகிய நமது கடமையாகும். இதன்மூலம் அடுத்த தலைமுறையினருக்கு திருமுறைகளை பண் சிதையாமல் கொண்டு செல்ல முடியும். இனி வரக் கூடிய காலங்களிலும் தென்னாடு செந்தமிழாகம சிவமடம் இதுபோன்ற நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுக்கும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இலங்கையில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் ஓதுவார்கள் நியமிக்கப் படவேண்டும் மீண்டும் திருமுறைகள் பண்ணுடன் கோயில்களில் பாடப்படவேண்டும் என்ற தாழ்மையான கருத்தினையும் தென்னாடு மடம் சார்பாக விழாவில் பதியப்பட்டது.



# மார்கழியில் ஓர் பெருவிழா



சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர், உருவம், அருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளில் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்பவர். அத்தகைய பரம்பொருள் உணர்த்தும், சைவத்தமிழ் பாரம்பரியங்களுள், விழாக்களும் ஒன்றாகும். அவ்வாறான சைவத்தமிழ் வளர்க்கும் விழாக்களில் தவிர்க்க இயலாத ஒன்று தான் மார்கழிப் பெருவிழா. மார்கழித் திங்கள் என்றாலே சிவனுக்கு உரித்தான திங்களாக கருதப்படுகிறது. இந்தத் திங்கள் 'பீடுடைய திங்கள்' அதாவது உயர்வுடைய திங்கள் என்ற பெருமைக்குரியதாகும். இப்பெருமைக்குரிய திங்களில் நற்றமிழால் நால்வர் நெறியை நலம் புகழ்ந்துரைத்த பெருவிழாவாக இடம்பெற்றது.

**"பூழியர் கோன் வெப்பு ஒழித்த புகழியர் கோன் கழல் போற்றி**
**ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி**
**வாழி திரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி**
**ஊழி மலி திரு வாதவூரர் திருத்தாள் போற்றி"**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்திய மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (மார்கழி 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்தி முடிப்பதற்கு இறைவனின் திருவருள் கைகூடியது.

### அப்பர் சுவாமிகள் அமர்வு

மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை முதல் அமர்வாக அப்பர் சுவாமிகளின் அமர்வு இடம்பெற்றது. இதன் முதல் நிகழ்வாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சரர் திருக்கோயிலில் பூசை இடம்பெற்றது. பூசையின் பின்னர் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுனரான சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களால் தொடக்க உரை நிகழ்த்தப்பட்டது. அவரின் உரையில் அவர் சைவம் மீது கொண்ட பற்று நிலையை அனைவராலும் உணர முடிந்தது. துவக்க உரையின் பின்னர், யாழ்ப்பாணத்தின் சைவக்கொழுந்தென அழைக்கப்படும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர். சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா ஐயா அவர்கள் தலைமையுரையை மிகச்சிறப்பாக ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து அப்பரின் திருமுறை விண்ணப்பம் சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினரால் மிக அருமையாக இசைக்கப்பட்டது. அத்துடன் அப்பரின் தொண்டு நெறியை, நால்வர் நெறியை நயம்பட எடுத்துரைக்க தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருந்த, மதுரை சொ. சொ.மீ.சுந்தரம் ஐயா அவர்கள், அனைவரினதும் செவிக்கு விருந்தாக தன் இனிய தமிழால் எடுத்துரைத்தார். அத்துடன் மார்கழிப் பெருவிழாவிற்கான அப்பர் சுவாமிகள் அமர்வு நிறைவடைந்திருந்தது.

### சம்பந்தர் அமர்வு

மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் சம்பந்தர் சுவாமிகளின் அமர்வு தொடங்கியது. வலம்புரி நாளிதழின் முதன்மை ஆசிரியர் சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் ஐயா அவர்களின் தலைமை உரையை சிறப்பாக ஆற்றினார். அதனை அடுத்து சம்பந்தருக்கான திருமுறை விண்ணப்பம் கலாநிதி திருமதி. சுகன்யா அரவிந்தன் குழுவினரால் பத்தியோடு இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்பந்தரின் மகன்மை நெறியை, தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா அவர்கள், கேட்போரின் மனதில் தவமுதல்வரின் ஞானக்காட்சி தோன்றும் வண்ணம் எடுத்தியம்பினார்.



**சிவத்திரு
தெய்வேந்திரன்
ஆதிரையான்
தென்னாடு சிவமடம்**

அதனைத் தொடர்ந்து, 'ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு' அதாவது திருக்கோயில்களில் பண்ணமைதியோடு மூவர் திருப்பதிகங்களைப் பாடும் ஓதுவார் மரபின் முதல் இசைவாணர்களாகத் திகழ்ந்தவர்கள் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவியார் மதங்க சூளாமணியாரும் ஆவர். திருஞானசம்பந்தப் பெருமானாரைக்காண சீர்காழிக்கு இருவரும் வந்தனர் என்பதை சேக்கிழார்பெருமான்,

**"திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்**
**வருநீர்மை இசைப்பாட்டு மதங்கசூளாமணியார்**
**ஒருநீர்மை யுறுடைய பிள்ளையார் கழல்வணங்கத்**
**தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார்."(2029)**

என்று கூறுகிறார் பின் இருவரும் ஞானக் குழந்தையின் முன்பு எவ்வாறு பாடினர் என்பதனையும் தெளிவுறக் கூறியுள்ளார்.

**"தானநிலைக் கோல்வடித்துப் படிமுறையைத் தகுதியினால்**
**ஆனஇசை ஆராய்வுற் றங்கணர்தம் பாணியினை**
**மானமுறை பாடினியாருடன் பாடி வாசிக்க**
**ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோ ரதிசயித்தார்." (2033)**

**"யாழிலெழு மோசையுட னிருவர்மிடற் றிசையொன்றி**
**வாழித்திருத் தோணியுளார் மருங்கணையு மாட்சியினைத்**
**தாழுமிகு சிறைப்பறவை படிந்தனி விசும்பிடைநின்**
**றேழிசைநூற் காந்தருவர் விஞ்சையரு மெடுத்திசைத்தார்." (2034)**

என்பது சேக்கிழார் வாக்காகும். இப்பாடல்கள் கொண்டு நோக்கும் போது இருவரும் மிடற்றிசையால் (வாய்ப்பாட்டால்) பாட அதே நேரத்தில் பாணனார் மட்டும் யாழ்கொண்டு வாசித்தார் என்பதறிய முடிகிறது. நீலகண்டப் பெரும் பாணனாரும் மதங்க சூளாமணியாரும் இணைந்து பாடிய வண்ணமே யாழிசை மேற்கொண்ட திறத்தைக் கூறும் சேக்கிழார் பெருமான் அவர்கள் இருவரும் திருப்பதிகங்களை இசையிலிட்ட வரலாற்றையும் செப்புகின்றார்.

இவ்வாறு, இறைவன் புகழை பலரும் பாடியுள்ள நிலையில், தற்காலத்தில் ஓதுவார்களின் நிலை கவலைக்கிடமாகவே யுள்ளது. இந்நிலையை மாற்றும் முகமாகவும், ஓதுவார் பண்பை ஊக்குவிக்கும் முகமாகவும், மார்கழிப் பெருவிழாவிலே ஓதுவார்களை அழைத்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி, நினைவு வேலும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு யாழ் மண்ணுக்கே ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. தொடர்ந்து, இறுதி நிகழ்வாக இறைவனின் ஆசியோடு சைவ மாணவர் சபையின் நிர்வாகச் செயலாளர் சிவத்திரு வனராஜ் சசிராஜ் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டு முதல் நாள் நிகழ்வு நிறைவு செய்யப்பட்டது.



### சுந்தரர் அமர்வு

மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசையோடு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அமர்வு நிகழ்வுகள் சிறப்பாக ஆரம்பித்து துவக்க உரையை தென்னாடு திங்கள் இதழின் ஆசிரியரான சிவத்திரு ஜெயபாலன் தவேதன் அவர்கள் ஆற்றினார்கள். அதனை தொடர்ந்து வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரான சிவத்திரு. இளங்கோவன் இலட்சுமணன் அவர்களால் சிறப்பானதொரு தலைமை உரை நிகழ்த்தப் பட்டது. தலைமையுரையைத் தொடர்ந்து சுந்தரருக்கான திருமுறை விண்ணப்பம் சிவத்திரு சிவநாதன் பிரதீபன் குழுவினரால் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த சொ.சொ. மீ சுந்தரம் ஐயா எம்மத்தி யில் தோழனாக நின்று சுந்தரரின் தோழமை நெறியை சிறப்பாக எடுத்துரைத்தார். அத்துடன் சுந்தரர் அமர்வு நிறைவு அடைந்தது.

### மணிவாசகர் அமர்வு

மதியம் 1.30 மணியளவில் நால்வரின் இறுதி அமர்வாக மாணிக்கவாசக சுவாமிகளின் அமர்வு தொடங்கியது. தலைமையுரை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவத்திரு கணபதிப்பிள்ளை மகேசன் அவர்களால் நிகழ்த்தப்பட்டதோடு திருவாசக விண்ணப்பமும் சிவத்திரு பத்மநாதன் சிவமைந்தன் அவர்களால் பாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அன்பே சிவமாய் அமர்ந்திருந்த சொ.சொ.மீ சுந்தரம் ஐயா அவர்கள், அன்பு நெறியைப் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார். அதில் சிறப்பாக திருவாசகத்தில் கூறப்பட்ட அன்பின் திறத்தையும், சிவபுராணத்தில் ஆறு வாழ்க, ஐந்து வெல்க, எட்டு போற்றி என்று இறைவனை போற்றுவதில், 6,5,8 என குறிப்பிடப்படு வது, திருவாசகப் பாடல்கள் 658 தான் என அனைவரது சந்தேகங்களையும் பூர்த்தியாக்கினார்.

பின், சமுகப்பற்றாளர்களுக்கான நினைவு நடராசர் சிலை வழங்கி, கௌரவிப்பும் இடம்பெற்றது. தொடர்ந்து, மார்கழிப் பெருவிழாவின் இறுதி நிகழ்வாக சைவ மாணவர் சபையின் நிர்வாகச் செயலாளர் சிவத்திரு வனராஜ் சசிராஜ் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. அத்துடன் மார்கழிப் பெருவிழாவானது, சைவமும், தமிழும் தழைத்தோங்க, நிலைநாட்ட பல ஆற்றலாளர்களை வளர்த்துவிட்ட யாழ் இந்துக் கல்லூரி மண்ணில், ஞானலிங்கேச்சர பெருமான் அருளோடு சிறப்பாக நிறைவடைந்ததது.

யாழ் மாவட்டத்தில், இதுவே முதன்முதலாக நடைபெற்ற மார்கழிப் பெருவிழா என்பதில் பெருமையடைவதோடு, இந்நிகழ்வை சிறப்புற ஒழுங்கமைத்த தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தோடும், சைவ மாணவர் சபையோடும் நாம் அனைவரும் இணைந்து சைவம் தழைக்க வழியமைப் போம்.

**திருமுறையே சைவநெறிக் கருவூலம் செந்தமிழ் தேன்பாகு ஆகும்**
**திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருளிய தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்**

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

**திருச்சிற்றம்பலம்**

# மார்கழிப் பெருவிழா முதலாம் நாள் நிகழ்வுகள்



# மார்கழிப் பெருவிழா இரண்டாம் நாள் நிகழ்வுகள்



















# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

**(சித்தானைக் குட்டி சுவாமிகள் சென்ற திங்களத் தொடர்ச்சி)**

## குருதேவரின் அருட்காட்சி

குருதேவரின் ஆசியை பெறுவதற்காகச் சித்தானை ஈனமுத்தரின் குடிசையைச் சுற்றித்திரிந்த காலம் ஒன்றிருந்தது. பிச்சைக்காரரோடு பிச்சைக் காரனாகச் சேர்ந்து போய் குருதேவரின் கண்களில் படும் வண்ணம் உட்கார்ந்து சாப்பிடுவார். சீடன், எதற்காகச் சுற்றுகிறான் என்பதை குருதேவர் உணர்ந்தார். தனிமையில் அழைத்து பின்வரும் அருள்வாக்கு வார்த்தைகளையும் கூறினார்.

**“புளியமரத்து வீட்டுக்காரி கள்ளன் பெண்பிள்ளையை எடுப்பாய், வம்புவரும், வழக்குவரும், கெட்டுக்கீரை விற்று, பறங்கித்துரை, கோணாமலை “எ” னாவைப்பார்க்கிலும் “பெ”னாவாய் இருப்பாய்.”**

**‘எ’** னாவைப் பார்க்கிலும் **‘பெ’**னாவாய் இருப்பாய் என்றால் என்னைப்பார்க்கிலும் பெரியவனாய் இருப்பாய் என்பது பொருள், இவ் அருள்வாக்கு வார்த்தைகள் சித்தானைக்குட்டி சுவாமிகளின் வாழ்க்கையில் எவ்வாறு பலித்தன என்பதை இனிக் கவனிப்போம்.

சுவாமிகள் குயீன்ஸ்பரியிலும், சுற்றிலுமுள்ள தோட்டத் தொழிலாளர் மத்தியிலே பல சித்துகளை விளையாடி அவர்களை எல்லாம் ஆண்டவனை மறவாத அடியார்களாக்கிக் கதிர்காம யாத்திரை புறப்பட்டார்கள். கால் நடையாகவே யாத்திரை செய்து கதிர்காமம் சென்று சேர்ந்தார்கள். கதிர்காமம் செல்லும் முன்பே கதிர்காம முருகனைப் பற்றி சுவாமிகள் சில பாடல்கள் பாடினார்களாம். அதனைக் காதால் கேட்டதாகக் கூறுகிறார்கள் சிலர். ஆனால் யாராவது எழுதி வைத்தார்களில்லை.

இன்று இராமகிருஷ்ண பரமஹம்ச தேவருக்கு வாய்த்த சீடர்கள் அன்றாடம் தமது குருதேவருடைய நித்திய கருத்துக்களைத் தேதிவாரியாக ஒன்றும் விடாமற் குறித்து வைத்திருந்தார்கள். அங்ஙனம் அவர்கள் குறித்து வைத்திருந்த உயர்ந்த கருத்துக்கள் இராமகிருஷ்ண உபநிடதமாகவே போற்றப்படுகின்றன. ஆனால் சித்தானைக்குட்டி சுவாமிகளின் பின்னால் திரிந்த நன்கு கற்ற சீடர்களும், அவ்வப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, சுவாமிகளுடைய திருவாக்குகளைக் குறித்து வைத்தாரில்லை.

அப்படி எந்தச் சீடனின் உள்ளத்திலும் இக் கருத்தை எழாமல் செய்ததும் சுவாமிகளின் திருவிளையாடல்களில் ஒன்றாகும். கள்ளுண்டு, புலால் உண்டு, காமவசப்பட்டவரை போல் நடித்து, வெளி ஆசாரசீலர்களைத் தம்மிடத்து நெருங்கவிடாது வைத்திருந்தார். சிலர் வெளி ஆசாரத்தை மாத்திரம் கவனித்து உள்ளத்தை நரகக் காடாக்கி வைத்திருந்தார்கள். அத்தகையோருக்குத் தகுந்த பாடமாக இருப்பதற்காகவே சுவாமிகள் வெளி ஆசாரம் அற்றவர்போல் நடித்து உள்ளுணர்வில் உயர்ந்து நின்றார்கள்.

சுவாமிகளுடைய இத்திருவிளையாடலைப் பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. சுவாமிகள் நீண்ட காலம் வாழ்ந்து சமாதி அடைந்த காரைதீவு மக்களில் பலர் சுவாமிகளுடைய வெளிவேடத்தை மாத்திரம் பார்த்து அருவருப்புடையவர்களாகிச் சுவாமிகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்? சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்றுச் சிலர் சுவாமிகளை தரிசிக்கச் செல்வர். செல்கிறவர்களுடைய உள்ளப்பாங்கைச் சுவாமிகள் கண்ணாடியில் பார்ப்பதுபோல் பார்த்துவிடுவார்கள். **‘ஏ’**, ஒரு சாராயப் போத்தலைக் கொண்டுவா’ என்பார்கள். இது வந்தவருக்கு அருவருப்பாக இருக்கும். வந்தவருடைய உள்ளத்தில் சாமியார் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு உருவம் இருக்கும். அவர் கொண்டு வந்த உருவத்திற்கும் காணும் உருவத்திற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படும். ஒருவருக்கும் சொல்லாமலே எழுந்துவிடுவார். சுவாமிகள் இத்தகையோரைக் கண்டு ஒரு புன்சிரிப்போடு அவர்கள் விடயத்தை முடித்துவிடுவார்.

## கதிர்காமத்தில் பெற்ற காட்சி

கதிர்காமத்தில் மாணிக்ககங்கையில் நீராடி, கதிர்காமத் தானை வழிபட்ட பின்னர் மாணிக்கப் பிள்ளையாரின் பக்கத்திலுள்ள கதவோரமாக முருகப் பெருமானின் திருக்காட்சி கிட்ட வேண்டும் என்று உண்ணா விரதத்தோடு தவங்கிடந்தார். பல வாரங்கள் கழிந்து விட்டன. சுவாமிகள் தமது வைராக்கியத்தைக் கைவிடவில்லை. ஒருநாள் கதிர்காம முருகப்பெருமான் கோயில் பெரிய கப்புறாளை கோயிலுக்குள்ளிருந்து வெளியே தந்து சுவாமிகளிடம் சென்றார். “உமது தந்தையார் உம்மை உள்ளே வருமாறு கூறினார்” என்றார். உடனே சுவாமியவர்கள் கப்புறாளையின் பின்னே சென்று கோயிலினுட் புகுந்தார். கதிர்காமத்தையன் சுவாமிகளை ஒரு சுரங்க வழியாக இட்டுச் சென்றார். ஏழுமலைகளிலுமுள்ள அற்புதக் காட்சிகளை ஒவ்வொன்றாகக் காட்டினார். கடைசியாய் ஒரு மலையிலுள்ள சுனையினின்றும் நீரை விரலில் எடுத்துச் சொட்டுச் சொட்டாக மூன்று தரம் வாய்க்குள் விட்டார். அத்துடன் உண்ணா நோன்பிருந்த இளைப்புக் களைப்பு எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து விட்டது. பிற்காலத்தில் சுவாமிகள் உணவைக் குறைத்தும் தொடர்ந்து பல நாட்களுக்கு உணவின்றியும் இருந்தபோது உடலில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் இந்த அமிர்தத் துளிகள் தான் என்று கூறுவாராம். கடைசியாகக் கதிர்காமத்தையன் கண்ணை மூடுமாறு கூறினாராம். இவர் கண்ணை மூடித் திறந்தார். கதிர்காம வீதியில் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்தார். காணாத காட்சிகளையெல்லாம் காட்டிய கதிர்காமத்தையன் மறைந்ததை எண்ணியெண்ணிக் கலங்கினார்.

## செல்லக் கதிர்காமத்தில் அனுபவம்

சில தினங்களின் பின் சுவாமிகள் வேறு இரு அடியார் களுடன் செல்லக் கதிர்காமம் சென்றார். ஆற்றங்கரையில் மூவரும் உறங்கினர். அதிகாலை மணி மூன்று இருக்கும். பக்கத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்டு மூவரும் விழித்தெழுந்தனர்.

அவர்கள் முன்னால் மலைபோல் ஒரு யானை நின்று கொண்டிருந்தது. பயத்தினால் பக்கத்தில் இருந்த இருவரும் விழுந்து அடித்துக் கொண்டு ஓடிச்சென்று மறைந்து விட்டனர். சுவாமிகள் கைவசம் இருந்த கற்பூரத்தைக் கொளுத்தி தீபாராதனை செய்தார். ஆனைக்கடவுளை அடிபணிந்து ஏத்தினார். நெடுஞ்சாண்கிடையாக (சாஷ்டாங்க மாக) வீழ்ந்து வணங்கி எழுந்தார். ஆனையைக் காணவில்லை. அந்தக் காட்டின் நடுவே அந்த நேரத்தில் சேவல் ஒன்று கூவும் சத்தத்தைச் சுவாமிகள் கேட்டார்கள். ஆனையாக வந்து காட்சி கொடுத்தவர் குருநாதராகிய பெரிய ஆனை என்றும், சேவல் கூவியதன் கருத்து முருகப் பெருமானுடைய திருக்காட்சிக்கு அடையாளம் என்றும் கூறினார்கள். இதன் பின் வருடந்தோறும் சுவாமிகள் கதிர்காம யாத்திரை செய்வது வழக்கமாயிற்று.

## சேதம்மாவின் சந்திப்பு

திசைமகாரகமவில் முத்துக்கந்தையா என்பவர் P.W.D ஓவசியராக இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் சேதம்மா என்பது. அம்மையார் காரைதீவைச் சேர்ந்தவர். இவர்களுக்குப் பிள்ளை குட்டிகள் யாரும் இல்லை. கந்தையா ஓவசியர் பெருங்குடிகாரன். உழைப்பெல்லாம் குடிக்கே செலவு செய்தார். அம்மையார் கடவுள்பத்தி உடையவர். சிவனடியார்களைக் கண்டால் மனமுவந்து வரவேற்று உபசரித்து அனுப்புவார். முத்துக்கந்தையா குடியில் இன்பம் கண்டார். அம்மையார் சிவனடியார்களை உபசரிப்பதில் ஆனந்தம் அடைந்தார். குடிகாரனோடு ஒரு பெண் என்ன இன்பத்தை அநுபவிக்க முடியும். மனிதன் இயல்பிலேயே விலங்கு மனத்தை உடையவன். தினமும் குடியிலே மூழ்கி இருப்பவனிடம் மனிதத்தன்மையை எப்போது காணமுடியும். ஓவசியர் வீட்டில் இருக்கும்போது யாராவது சாதுக்கள் வந்தால் அவர்களை முற்றத்தில் வைத்தே ஏதாவது இரகசியமாகக் கொடுத்து அனுப்பி விடுவார் அம்மையார். ஓவசியர் வீட்டில் இல்லாதபோது சிவனடியார்கள் வந்தால் உள்ளே அழைத்து அவர்களை பாதம் விளக்கி பசியாற்றி கையிலும் ஏதாவது கொடுத்து அனுப்புவார்.

ஓவசியருக்குச் சாதுக்களைக் கண்டால் பிடிக்காது. அது அவருடைய இயற்கை. அம்மையார் ஓவசியர் முன்னிலையில் பற்றற்ற இல்லற வாழ்க்கையும் அவர் இல்லாத நேரத்தில் சிவனடியார்களுக்கு அன்னமிடும் துறவற வாழ்க்கையுமாக இரட்டை வாழ்க்கை வாழவேண்டி ஏற்பட்டது. குடிகாரனாயிருந்தாலும் கணவன், கணவன் தானே. அதை மனதுட் கொண்டவராய்க் கணவனுக்குச் செய்யும் கடமைகளில் எதுவும் குறைவில்லாது செய்யும் கற்புடைய அம்மையாராய் விளங்கினார். கணவனுக்குச் சாதுக்களை ஆதரிக்க விருப்பமில்லாததாயினும், அம்மையார் தமது ஆன்ம ஈடேற்றத்திற்காக அதனையும் செய்து வந்தார்.

திசைமகாரகமவில் இருந்து கதிர்காமம் செல்லப் புறப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள் ஓவசியர் முத்துக்கந்தையாவினுடைய வீடடைந்தார்கள். அம்மையார் சுவாமிகளை வரவேற்று உபசாரங்கள் செய்தார்கள். சுவாமிகளுடைய தோற்றம் அம்மையாருடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. சிவபெருமானேதான் இந்தக் கோலத்தில் வந்தாரோ என்று அம்மையாருடைய உள்ளத்தில் ஒரு எண்ணம். முதல் முறைதான் சுவாமிகளை தரிசித்தார் என்றாலும் நீண்டநாட்கள் அன்போடு பழகியவர்களைத் தரிசித்தது போல் மனதில் ஒரு உணர்வு.

**“சுவாமி, கதிர்காமம் கொடியேற இன்னும் நாட்கள் பல இருக்கின்றன. அதுவரைக்கும் சுவாமிகள் இங்கு தங்கிச் செல்லலாமே”** என்று அம்மையார் கேட்டார். **“சுவாமிகளுடைய வருகையால் நான் புனிதவதி ஆனேன். என் வீடும் புனிதம் அடைந்தது. சுவாமிகள் இங்கு தங்கினால் எனது கணவரும் திருந்தி விடுவார்”** என்றார். சுவாமிகள் புன்முறுவல் பூத்தார். **“நீ நினைப்பதுபோல், நான் இங்கிருந்தால் நீ சுகம் அனுபவிக்க மாட்டாய். சன்னியாசிகள் குடும்பத்தர்களுடைய வீட்டில் தங்கக்கூடாது. அது சன்னியாச ஆச்சிரமத்திற்குப் பிழை. சன்னியாசிகளை இல்லறத்தவன்தான் காப்பாற்றுகிறவன் என்றாலும் ஒரு நேரச் சாப்பாட்டிற்குமேல் அந்த வீட்டில் அவன் நிற்கக்கூடாது. ஒரு ஊரில் மூன்று நேரச் சாப்பாட்டிற்கு மேல் நிற்கக்கூடாது. ஆனபடியினால் நான் என்பாட்டிலே சென்று பசிக்கும்போதெல்லாம் இங்கு வருவேன்”** என்று கூறிச் சென்றுவிட்டார். சுவாமிகள் அங்கு அடிக்கடி வந்து முற்றத்திலேயே நின்று அம்மையாரின் உபசாரத்தைப் பெற்றுத் திரும்பி விடுவார்.

அம்மையார் சுவாமிகள் மீது தமது உயிரையே வைத்திருந்தார். சுவாமிகள் வரும் நாட்களில் அம்மையாருக்குத் தனியான ஒரு மகிழ்ச்சி. சுவாமிகள் வராவிட்டால் எப்போ வருவார் வருவார் என்று ஏக்கத்தோடு காத்திருப்பார். அம்மையாரின் மனத்தெண்ணச் சத்தியினால் போலும், சுவாமிகள் அடிக்கடி வந்து காட்சி கொடுப்பார். அம்மையார் சுவாமிகள் மீது இவ்வளவு அளவு கடந்த அன்பு வைத்திருப்பது ஓவசியருக்குப் பிடிக்கவில்லை. மனைவி மீது சந்தேகப்படவும் தொடங்கினார். இதுபற்றித் தினமும் ஏதாவது சச்சரவு நிகழ்ந்து கொண்டே இருந்தது.

ஒருநாளிரவு ஓவசியர் நல்ல குடிவெறியில் வந்தார். அந்தச் சாமி இங்கே வந்தானா? என்று கேட்டுக்கொண்டே வந்தார். அம்மையார் அவர்கள் யாதொன்றும் பேசாது தனது கருமத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஓவசியருக்கு மனைவியின் மௌனம் மேலும் கோபத்தை மூட்டியது. கட்டிய கணவனிலும் பார்க்க அந்தப் பரதேசிப் பயலிடம் உனக்கு என்ன கூட்டுறவு என்று அம்மையாரை அடிக்கத் தொடங்கினார். வெறி முறியும் வரை ஓவசியர் அடித்தார். அம்மையார் மூர்ச்சித்து விழுந்தவர் அப்படியே நித்திரையாகிவிட்டார்.

வழக்கமாக அம்மையார் நான்கு மணிக்கே எழுந்து தமது கடமைகளைச் செய்பவர். இன்று ஆறுமணியாகியும் நித்திரைவிட்டு எழவில்லை. வேலை செய்பவர்களும் முற்றத்தில் வந்து கூடிவிட்டனர். சுவாமிகளும் வந்து நின்றார். சமையல்காரன் ஓடோடி வந்தான். **“சுவாமி தயவு செய்து இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடுங்கள். இராமுழுவதும் அந்த அம்மா வாங்கிய அடியோ சொல்ல முடியாது”** என்றான். **“சுவாமி, ஐயா எழுந்து வரும்போது உங்களைக் கண்டால் உங்களுக்கும் தவறாமல் அடித்தே விடுவார். எங்களால் அதைப் பார்க்க முடியாது சுவாமி, தயவு செய்து இங்கு நிற்காமல் எங்காவது சென்று மறைந்து விடுங்கள்”** என்று துரிதப்படுத்தினான் சமையல்காரன்.

சுவாமி அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். **“சரியப்பா நான் போகிறேன் முழுவதும் நானும் வயிற்று வலியால் மிகவும் துன்பப்பட்டேன். இரண்டொரு மிளகும் வேர்க்கொம்பும் தா. நான் போய்விடுகிறேன்”** என்று கூறினார். சமையல்காரன் உடனேயே மிளகும் வேர்க்கொம்பும் கொடுத்துச் சுவாமிகளை வெளியே அனுப்பிவிட்டான்.

ஓவசியர் வீட்டுக்கு எதிரே ஒரு கள்ளிப்பற்றை. அதனை நாடிச் சென்றார் சுவாமிகள். கள்ளிப்பற்றையின் முன்னால் நின்று படடி, படடி என்று உரத்த சத்தமாகக் கூறினார். நிமிர்ந்து நின்ற கள்ளிகள் தரைமட்டமாகப் படுத்துவிட்டன. அதன்மேல் சுவாமிகள் ஏறி இருந்தார்கள். ஒரு கள்ளித் தண்டைக் கத்தியால் தோண்டினார். கொண்டு சென்ற மிளகையும் வேர்க்கொம்பையும் அதனுள் வைத்து அடைத்தார். கஞ்சாக்குழலை எடுத்தார். அதனுள் கஞ்சாப் புகையிலையைச் செலுத்தினார். குழலில்நெருப்பை மூட்டினார். மேலே அண்ணாந்து பார்த்தார். கதிர்காமத்தின் ஏழுமலைகளும் வரிசையாகக் கண்ணுக்குத் தென்பட்டன. சுவாமிகள் ஆவேசம் வந்தவர் போலப் பின்வருமாறு பேசினார்:

**“ஏழுமலையானே, நீ கள்வனா? அல்லது நான் கள்வனா? அல்லது முத்துக்கந்தையா கள்வனா?”** இவ்வாசகங்களைச் சொன்ன பின்னர் புகையை உள்ளே இழுத்து இரண்டொரு தடவை வெளியே விட்டார். இருப்பிடத்தைவிட்டு எழுந்தார். ஜெய்சீத்தாராம், ஆனை, நவநாதா, கதிர்காமா என்று உரக்கக் கூறிக்கொண்டே கதிர்காமத்தை நோக்கிப் பயணமானார்.

(சித்தானைக்குட்டி சுவாமிகளின் சித்துக்கள் தொடரும்)


திருச்சிற்றம்பலம்

**ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்**
**சித்தானைக் குட்டி சுவாமி மீண்டும் வருவார்.**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரியபுராணம்: நேயமிக்க நேச நாயனார்



சிவத்திரு. பா.சிவமாதவன் புதுக்கோட்டை



நேயத்தே நின்ற நிமலனாக இருந்து அன்பினால் தொழுவார்களின் அரணாக நிற்பவன் ஈசன். “எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக” என்பது திருவாசகம். அதுபோலவே எந்த சமயத்திலும் இலாதோர் சிறப்பாக தொண்டர்களின் வரலாற்றைக் கூறுவது சைவம். தொண்டர்களுக்கு சிறப்பை தந்து இறைவனே அவர்களைத் தேடி வந்து அருள் செய்வதெல்லாம் அடியார்களின் அன்பின் திறத்தை வெளிக்காட்டுகிறது. அந்த வகையில் திருத்தொண்டர் புராணம் சைவ சமயத்திற்கு கிடைத்த கொடை. அதில் கூறப்பட்டவை வெறும் வாழ்கை வரலாறு அல்ல. எப்படி பத்தி செய்ய வேண்டும், இறைவன் எப்படி இருப்பான்? அவன் தன்மைகள் என்ன? அவனை எப்படி அடையலாம்.? என்பனவற்றையெல்லாம் மிக சிறப்பாக கூறுகிறது. இறைவன் எந்த அளவிற்கு எளிமையானவன், பத்தி செய் அடியாரை பரம்பரத்து உய்ப்பவன் என்பதை சிறப்பாக வெளிப்படுத்துகிறது பெரியபுராணம்.

இறைவனின் திருவடியை அடைவதற்கு தேவையானது அன்பு. அந்த அன்பை பொழிபவர்களுக்கு ஆண்டவன் அருளைக் கொழிப்பான். இறைவன் நம்மீது காட்டும் அன்பே அருளாகும். அன்பைக் குறிக்கும் மற்றொரு சொல் நேசம். நேசம் நிறைந்த உள்ளம் அடியார்களின் உள்ளம். முதலில் நேசம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். பாசத்திற்கும் நேசத்திற்கும் வேறுபாடு உண்டு. பாசமும் நேசமும் ஒருபோதும் ஒன்றல்ல. பாசம் மாறும் தன்மை உடையது. ஆனால் நேசமோ மாறாதது. அதனால் தான் மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் இறைவனை வணங்க வாராது துயின்ற தோழியை பார்த்து “நேசமும் வைத்தனையோ நேரிழையாய்” என்று கேட்பதாக குறிப்பிடுகிறார்.

அப்பேற்பட்ட நேசத்தை நெஞ்சிலும் பெயரிலும் தங்கியவர்தான் நேசநாயனார். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகையில் “வரிவளையால் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்” என்றார். ஏனென்றால் பெயரிலேயே நேசம் இருப்பதால் அதுவே அவரின் பெருமையைக் குறிப்பிடுகின்றது. நம்பியாண்டார் நம்பி அவர்கள் திருத்தொண்டர் திருவந்தாதியில் நேச நாயனாரை பற்றி சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்,

**“நாட்டமிட் டன்றறி வந்திப்ப வெல்படைநல்கினர்தந்**
**தாட்டரிக் கப்பெற்ற வன்என்பர் சைவத் தவர் அரையில்**
**கூட்டுமக் கப்படங் கோவணம் நெய்து கொடுத்துநன்மை**
**ஈட்டுமக் காம்பீலிச் சாலிய நேசனை இம்மையிலே.”**

அதாவது ஆயிரம் பூவினில் ஓர் பூக்குறைய, திருமலானவர் தன் கண்ணை இடந்து அரனடியில் வைத்தார். இறைவனும் சக்கரத்தை கொடுத்து அருள் செய்தார். அப்பேற்பட்ட இறைவனின் திருவடிகளை தன் தலையில் தரிக்கப்பட்டவர் நேசனார். ஆடை நெய்யும் மரபில் வந்த நாயனார் அடியார்களுக்கு கண் போல காக்கும் கீழிணையாகிய கோவணத்தை கொடுத்தவர். நன்மை ஈட்டுதல் என்பது சிவபுண்ணியத்தை சேர்ப்பது. நல்வினை என்பது தீர்ந்து போகும் சுகத்தை தரும். ஆனால் சிவபுண்ணியம் அழியாதது. முத்தியை தருவது. நாம் செய்கின்ற நல்வினைகளை இறைவனே நடத்துவதாக எண்ணி ஆணவமற்று செய்வோமானால் சிவபுண்ணியத்தை சேர்க்கும். காம்பீலி என்பது அடியாரின் ஊராகும். இது பல்லாரி மாவட்டத்தில் உள்ள ஒரு ஊராகும். இப்பகுதியில் தோன்றிய நேச நாயனார் தற்போதைய மயிலாடுதுறை மாவட்டத்தின் கூறைநாட்டில் வாழ்ந்து வந்தார் என்றும், இங்குள்ள சிவபெருமானின் திருக்கோயிலில் தம் பகுதியிலிருந்து கொணர்ந்த மூத்தபிள்ளையாரையும், இளைய பிள்ளையாரையும் (முருகன்) எழுந்தருளுவித்து வழிபட்டார் என்றும் கூறுவர். தெய்வச் சேக்கிழார் பெருமான் நாயன்மாரை குறிப்பிட வருகையில்,

**“சீர்வளர் சிறப்பின் மிக்க**
**செயல்முறை ஒழுக்கம் குன்றா**
**நார்வளர் சிந்தை வாய்மை**
**நன்மையார் மன்னி வாழும்”**

இதில் சீர்வளர் சிறப்பின் மிக்க செயல்முறை ஒழுக்கம் என்பது மிக சிறப்பான ஒரு வாக்கியமாகும். செயல்முறை ஒழுக்கம் என்பது கவனிக்க வேண்டிய சொல்லாகும். ஏனெனில் ஒழுக்கம் என்பது எட்டில் வைத்து படிப்பது அல்ல. நடைமுறையில் இருக்க வேண்டிய ஒன்றாகும். நல்ல செயல்களை நடைமுறைப்படுத்தினால் உலகில் அனைத்தும் சிறப்பானதாக இருக்கும். சாதாரணமாக நாம் சாலை விதிகளை கடைப்பிடிப்பதும் சிறப்பான ஒழுக்கம், அதனைப் பற்றிய அறிவும் இருக்கும். அதனை நடைமுறையில் கொண்டு வருவதற்கு மனம் ஒத்துபோக மறுக்கின்றது. அவ்வொழுக்கத்தினை கடைபிடித்தால் சாலை விபத்துகள் தவிர்க்கப்படும். எனோ அதை செய்வதில்லை. அது போலவே வாழ்விலும் நல்லொழுக்கங்களை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பதை இப்பாடலின் ஊடாக நமக்கு சேக்கிழார் விளங்கப் படுத்துகிறார்.

எனவே நேசனார்,

**“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.”**

என்ற வள்ளுவரின் வாக்கிலுள்ள சொல்லிய வண்ணம் செயலாற்றும் அரியவராக நாயனார் விளங்கியது குறிப்பிடத்தக்கது. மேலும் நாயனார் என்ன செய்தார் என்பதை சேக்கிழார் பெருமான் சிறப்பாக குறிப்பிடுகிறார்.



**“ஆங்கவர் மனத்தின் செய்கை**
**அரனடிப் போதுக் காக்கி**
**ஓங்கிய வாக்கின் செய்கை**
**உயர்ந்த அஞ்செழுத்துக்குக் காக்கி**
**தாங்குகைத் தொழிலின் செய்கை**
**தம்பிரான் அடியார்க் காகப்**
**பாங்குடை யுடையுங் கீளும்**
**பழுதில் கோவணமும் நெய்வார்.”**

அவர்தம் உள்ளத்தின் நினைவை சிவபெருமானின் திருவடி மலர்களுக்கு ஆக்கி, மேன்மேலும் ஓங்கிய வாக்கின் செயலை உயர்வுடைய ஐந்து எழுத்துக்கு ஆக்கி, மேற்கொண்ட கைத்தொழில் திறனையெல்லாம் தம் இறைவரின் அடியவர்களுக்காக ஆக்கி, நல்ல பான்மையுடைய கீள் உடையும், பழுது இல்லாத கோவணமும் ஆகிய இவற்றை நெய்வார்.

மனத்தின் செய்கை என்பது - நினைதல், “நினையாது ஒருபோதும் இருந்தறியேன்” என்பது நாவரசர் வாக்கு. “சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன் கண் இணை நின் திருப்பாத போதுக்காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி” என்பது திருவாசகம். உடையும் கீளும் கொடுத்தவருக்கு முத்தி கொடுத்தாரா? என்றால் இல்லை, அவர் எந்த நிலையில் செய்தார். அன்போடு செய்தார் அது மட்டுமில்லை, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் தொண்டு செய்தவர் நேசனார்.

**“வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்**
**தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை**
**சூழ்த்த மாமலர் தூவி துதியாதே**
**வீழ்த்தவா வினையேன் நெடுந் காலமே” (அப்பர்)**

எனவே இறைவனை நாம் அன்பால் நினைக்க வேண்டும். நமசிவாய! நமசிவாய! என்று வாயார சொல்ல வேண்டும். இறைவனுக்காக தொண்டு செய்யும் நிலைக்கு உயர வேண்டும். நேசன் யார்? என்ற கேள்விக்கு நேசனாரே பதிலாக இருப்பார். நாயனாரின் தொண்டைப் போற்றுவோம்.

**“நேசமிகு நேசனாரை நெஞ்சில் வைப்போம்”**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி -
## தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் எழில் கொஞ்சும், வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பிரதேசமான தம்பலகாமத்தில் அமைந்துள்ள சிவன் கோயில் இதுவாகும். புராதன காலம் தொட்டு தமிழர்கள் குளங்கள், வயல்கள் என்பவற்றை உருவாக்கி, குடிகளைப் பெருக்கி, கால் நடைச் செல்வங்களோடும் சைவ வழிபாட்டு நம்பிக்கைகளோடும் வாழ்ந்த பழம் பெரும் மூதூர் தம்பலகாமம் ஆகும். வரலாற்றுப் பெருந்தகைகளின் ஆய்வுக் கூற்றுப்படி இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் அங்கு தமிழ்மொழி பேசும் நாகர் முதன் முதலாகச் சமூகவாழ்க்கைக்கு ஆதாரமான உற்பத்தி முறையினை உருவாக்கினார்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

இதற்கான தடயங்களை தம்பலகாமம் பிரதேச சபைக் குட்பட்ட கழனிமலைப்பகுதியில் காணலாம். மாசிலாமணி முத்துக்குமாருப்புலவர் பாடிய திரிகோணாசலபுராணத்திலும் தம்பலகாமம் என்னும் நகரைப் பற்றி ஓர் படலம் உள்ளது. அதில் அவ்வூரின் வனப்பு நூலாசிரியரால் நயமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்பொருட் சின்னங்களிலும் இலக்கியங்களில் இடம் பிடித்த வரலாற்றுப் பெருமை பெற்ற தம்பலகாமத்தில் இலங்கையில் புகழ்பூத்து விளங்கும் திருக்கோணேஸ்வர சிவாலயத்தின் பிரதியாக விளங்குவது ஆதிகோணநாயகர் சிவன் கோயிலாகும். இக் கோயில் திருகோணமலை நகரில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பாதையில் சுமார் 22 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

### திருத்தலவூரின் சிறப்பு

சாசனங்கள், இலக்கியங்கள், காகிதங்கள் முதலிய ஆதாரங்களைத் துணையாகக் கொண்டு இத்தலவூரின் சிறப்புக்களை அறிந்து கொள்ளலாம். இலங்கைத் தமிழர் வரலாறு எழுதிய பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள், பக்கம் 328 இல் இவ்வூரின் தொன்மையை வரலாற்றுச் சான்றுடன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "2000 வருடங் களுக்கு முன்பு தம்பலகாமம் நாகரின் ஆட்சி ஏற்பட்டிருந்த வேள்புலம் என்பதும், அவர்கள் தங்கள் மரபு வழியான நாகவழிபாட்டிணைப் பின்பற்றினார்கள் என்பதும் கழனி மலையிற் காணம்படும் சின்னங்கள் மூலம் உறுதியாகின்றன"

மற்றும் கி.பி 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கற்சாசனம் ஒன்றில் ஏழு வரிகள் தெளிவாகத் தெரிகின்றன.

அவற்றுள் ஒன்பதாம் வரியில் "தம்பலகாம ஊ " என்று ஊரின் பெயர் பொறிப்புச் செய்யப்பட்டதை ஆராய்ந்த, மேற்குறிப்பிட்ட பேராசிரியர் அவர்கள், அக்கற்சாசனச் செய்தியைக் கொண்டு, "800 வருடங்களுக்கு முன்பு தமிழ் பேசும் மக்கள் புழங்கிய தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணம் தம்பலகாமம் கல்வெட்டு" என்று இவ்வூரின் சிறப்பை மேலும் நிரூபிக்கின்றார்.

அகராதி நோக்கில் பார்த்தால் தம்பலகாமம் என்பது தம்பல், காமம் என்றாகி, தம்பல் என்பது சேறு (தம்பலடித்தல் - பயிரிடுதல், உழவு செய்தல்), காமம் என்பது ஊர் ஆகும். எனவே வரலாற்றுக் காலம் முதல் நீர் வளம், நிலவளம் பயிர்வளம், ஆகிய சிறப்புக்கள் நிலை பெற்றுவந்த ஊர் என்பதை உணர்த்தி நிற்பதாகக் குறிப்பிடலாம். இதற்குத் தகுந்த சான்றுகளைச் திரிகோணாசல புராணம் தருகின்றது. தம்பலகாமத்தை இந்நூலாசிரியர் "தம்பைநகர் " "தம்பை வளநாடு" என்று கீழ்வரும் பாடல்களில் சிறப்புடன் எடுத்தோதியுள்ளார்.

"கன்னல் வேலி வரம்புடுத்த
கழனி சூழும் தம்பை நகர்"
"குறையா வளம் சேர் தம்பை நகர்க்"
"எழிலார் தம்பை வளநாட்டின்"

மேலும் தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் இயற்றிய வெருகல் சித்திர வேலாயுதர் சுவாமி காதல் எனும் நூலில் இவ்வூரை "தம்பலகாமம்" என்று பதிவு செய்துள்ளார். கோணேசர் கல்வெட்டு நூலில் இலங்கையின் வடகிழக்குப் பிராந்தியத்திலே, நான்கு குறுநிலப்பிரிவுகள் இருந்தன.

அவை, திருகோணமலை, கட்டுக்குளம்பற்று, கொட்டி யாரம் பற்று, தம்பல காமம் பற்று என்பவையே. அவற்றை வன்னிமை என்ற பட்டம் தரித்த தலைவர்களே ஆட்சி புரிந்தார்கள். அவர்களின் ஆட்சி பரம்பரை வழியிலானது இவர்கள் கோணேசுவரர் கோயில் தொடர்பான ஆலய வழமை, தொண்டு, ஊழியம், என்பவற்றுடன் தொடர்புபட்டி ருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவுவதற்கு முன்பு தம்பலகாமம், "தம்பலகாமம் பற்று" என்று குறிப்பிடுவதில் இருந்தும், திருக்கோணேசுவர கோயில் தர்மங்களோடு உரிமை பெற்ற தேசம் என்றும் சிறப்புப் பெற்றிருந்தது.

ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆதிக்கத்தின் போது 'Tamblegam', 'Tampalagam' என்ற பெயர்கள் அவர்களின் காகித ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

### திருத்தல வரலாறு

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்கள் ஒருங்கு சேர திருக்கோணேசுவர சிவாலயத்திற்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்ற தலம் தம்பலகாமம் ஆதி கோண நாயகர் கோயிலாகும். கோணநாயகரும், நாயகியும் மூர்த்தியாகவும், ஆலமரம் விருட்சமாகவும், ஆடி அமாவாசையன்று மகாவலி கங்கைக் கடலில் கலப்புரும் கங்கைத் துறையை தீர்த்தமாகவும் கொண்டு அடியார்களுக்கு அருள்பாலித்து வரும் அருளாற்றல் கொண்ட கோணநாயகராக இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். இவ்வாறு கோணை ஈசனைத் தொழும்பு முறைப் பூசைகளால் அன்புடன் தொழுது விண்ணவர் போல் இன்புற்று வாழ்பவர்கள் தம்மை வளநாட்டு மக்கள் என்று திரிகோணாசல புராண ஆசிரியர் இவ்வாறு சிறப்பித்துப் பாடியுள்ளார்.

"எழிலார் தம்மை வள நாட்டின்
உரிய கோணை யீசனுக்கு
ஆங்குற்ற தொழும்பு முறை பூசை
பரிவால் புரிந்து விண்ணவர் போல்
பாரின் வாழ்வுற்று இருந்தனரே"

இத் திருத்தலத்தின் வரலாறு பற்றி திருக்கோணாசல புராணம் செப்புகின்றது. கி.பி 1624 ஆம் வருடம் வருடப்பிறப்பு அன்று இலங்கையில் உள்ள சைவக் கோயில்களில் மூத்ததும், புராண இதிகாச, தேவார பாடல் சிறப்புக்களினாலும், வரலாற்றுச் சிறப்பினாலும் சிறப்பான, வனப்பான கட்டுமானங்களினாலும் அரசமானியங்களினாலும் சீர்பெற்ற திருக்கோணேசுவர கோயிலை போர்த்துக்கேய தளபதியான கொன்ஸ்ரான் ரைன்டீசா என்பவனும் அவனது உதவிப் படைகளும் இடித்தழித்தனர். அப்பொழுது அங்குள்ள பூசகர்களும், பத்தர்களும் அக்கோயிலிலிருந்த படிமங்களை மறைவாக எடுத்து குளங்களிலும், கிணறுகளிலும், பிற இடங்களிலும் மறைத்து வைத்திருந்தார்கள். அதில் ஒரு படிமம் தம்பலகாமம் சுவாமிமலையில் ஒளித்து வைத்து வழிபடப்பட்டு, அதுவே பின்னர் ஆதிகோணநாயகர் கோயிலிற்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இக்கோயில் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே




திருக்கோணேசுவர தலத்திற்கு ஈடான கோயிலாக தம்பலகாமத்தில் அமைக்கப்பட்டது. கோயிலின் நிர்மாணமும் பழைய கோயிலின் மானியங்களையும், தொழும்புகளையும் புதிய கோயிலுக்கு மாற்றும் பணிகளும் செங்கடகல அரசன் ராஜசிங்கன்(01) என்னும் மகாமன்னனின் ஆதரவுடன் நடைபெற்றன.


எனவே இப்புராண நூல் தகவல்படி திருக்கோணேசு வரத்திலிருந்து மறைத்து கொண்டு வரப்பட்ட புராதன மூலவர் திருமுன்னின் மூலமே ஆதிகோணநாயகர் கோயில் உற்பத்தியாகியுள்ளது என்றும் திருக்கோணேசுவரத்தில் நிலவிய தேசவழமைகள் தொடர்ந்து ஆதிகோணநாயகர் கோயில் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன என்பதையும் அறிய முடிகின்றது. இக்கோயிலில் அருள்பாலிக்கும் மூர்த்தியின் அற்புதங்கள் அம்மூர்த்தியின் கீர்த்தியை பார் முழுவதும் பறைசாற்றி நிற்கின்றன. அவற்றுள் ஒன்று கோணேசுவரர் கல்வெட்டில் கூறியபடி, திருக்குளத்து வேள்வி செய்யும் போது,

"மன்னு பச்சைப் பட்டுவரின் மழையுதவும், சிவப்பு மகா வெயிலே காட்டும்" என்பதற்கிணங்க மழை பெய்விக்க கோணநாயகருக்கு நேர்ந்து பச்சைப்பட்டு கட்டி வழிபட மழை பொழியும். சிவப்பு நிறப்பட்டு சாத்தினால் வெயில் வருவதும் இன்றும் தம்பலகாமத்தில் பத்தியுடன் நிகழும் அற்புதமாகும். மற்றைய அற்புதம், ஐம்பதுகளின் பிற்பகுதியில் கந்தளாய்க்குளம் பெருக்கெடுத்து உடையும் அபாயநிலையில் இருந்த போது, கோண நாயகருக்கு தொழும்பு செய்யும் ஒருவர் தங்கக் குண்டு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, குளத்தின் கழுத்தளவு நீரில் இறங்கி குளக்கோட்டன் நியதிப்படி சுட்டபோது, நீர்வற்றி அபாயநிலையும் தடுக்கப்பட்டது.

இக்கோயில், பெரிய இராச கோபுர அமைப்புடன் எழில் நிறைந்த வண்ணம் காணப்படுகின்றது. 1953, 1980, 1999, ஆகிய வருடங்களில் குடநன்னீராட்டு விழா கண்ட கோயிலாகவும், நாள்தோறும் நித்திய வழிபாடுகள். மாசி சிவன் இரவு, திருவாதிரை, ஆடி மறைமதி (அமாவாசை) ஆகிய தினங்களில் சிறப்பு வழிபாடுகளும், ஆனி உத்தர நன்நாளில் வருடாந்த பெருந்திருவிழா (மகோற்சவம்) 18 நட்கள் நடைபெறும். இத் திருவிழாவில் கதிர்காமம், வெருகலம்பதி, சித்தாண்டி போன்ற கோயில்களில் நடைபெறும் ஆதிகாலமரபுகளும், சடங்குகளும். காவடி, அங்கப்பிரதட்சனம் ஆகியனவும் இடம் பெறும்.

இத் திருத்தலத்தின் வரலாறுகளை அறிந்து கொள்ள திரிகோணாசல புராணம் தலையான இலக்கியமாக அமைந்துள்ளது. கோணை நாயகர் பரிபாலன சபையினரால்



1953 ஆம் வருடம் வெளியிட்ட "திருத்தம்பலகாமம் கோண நாயகர் கோயில் வரலாறும் மகா கும்பாபிஷேக வைபவமும்" என்ற நூலும், 1980 ஆம் வருடம் ச. ஜெயச்சந்திரன் ஆக்கிய குடமுழுக்கு விழா மலரும், இத்தலவரலாற்றை அறிய உதவும் பனுவல்கள் ஆகும்.

### நேசத்துக் கோயில் மரபு

ஆதியில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் நேசத்துக் கோயில்களுள் ஒன்றாகப் போற்றப்பட்டிருந்தது. இதற்கு தம்பசிட்டி வியாபாரி மூலையில் கிடைக்கப் பெற்ற ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புக் குறிப்பில், இக்கோயில் திருகோணமலை, கட்டுக் குளம், கொட்டியாரம், தம்பலகாமம் ஆகிய நான்கு பற்றுக்களைச் சேர்ந்த 33 ஊரார்கள் ஒன்று கூடி கொண்டாடி மகிழும் கோயிலாக இருந்ததைக் குறிப்பிடுகின்றது. இதற்கேற்றால் போல் கோயில் பதிவேட்டிலும் நான்கு பற்றுக்களையும் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஆலயசபை உறுப்பினர்களின் விபரங்களும் காணப்படுகின்றன. இருப்பினும் காலஓட்டப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் இக்கோயிலில் இருந்து வழக் கொழிந்து விட்டது.

2019 ஆம் ஆண்டு 'தேசத்துக் கோயில் தம்பலகாமம் ஆதி கோண நாயகர் ஆலயம்' என்ற தலைப்பில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய ஆய்வரங்கில் வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் அவர்கள் இக்கோயில் நேசத்துக் கோயில் மரபுகளைப் பேணியதுதான் என்று நான்கு ஆவணங்களை தேடியறிந்து ஆய்வாக முன்மொழிந்துள்ளார். அவைகள் வருமாறு

**(1) 1893 - ஆனிமாதம் - 14ம் திகதி வரையப்பட்ட உறுதி.**
**(2) 1928 - தைமாதம் எழுதப்பட்ட காகித ஆவணம்**
**(3) 1984 - மாசிமாதம் - 11ம்திகதி எழுதப்பட்ட காகித ஆவணம்**
**(4) 1934 ஆம் வருடம் எழுதப்பட்ட காகித ஆவணம்**

1வது உறுதி ஆவணப்படி கோணேசுவரர் கல்வெட்டில் ஓதியபடி கோயில் நடைமுறைகள் யாவும் தம்பலகாமத்தில் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்ட நேசமரபுத் தொழும்புகளைக் காட்டுவதாக உள்ளது. 2 வது ஆவணத்தில் ஆதிகோணநாயகர் கோயிலில் பரம்பரை பரம்பரையாக தொண்டு செய்யும் தொழும்பாளர் தன் கடமையை மகனுக்குக் பொறுப்பு கொடுப்பது தொடர்பானது. 3வது ஆவணமான காகிதத்தில் கந்தளாய் விநாயகர் கோயிலார் கோணநாயகர் கோயில் பரிபாலன சபையிடம் உதவி கேட்பதில் 'தேசத்தவர்' என்ற சொல்லை உபயோகித்தமை தொடர்பானது. 4வது ஆவணம் இத்தேசத்தார் முழுவதுமாக இணைந்து மகாசபை கூடுவது, தொடர்பானவை வரையப்பட்டுள்ளது. இவ்வாறு வைத்திய கலாநிதி அவர்கள் தேசத்துக் கோயில்களின் பட்டியலில் தம்பலகாமம் கோணநாயகர் கோயிலையும் இணைத்து தேசத்துப் பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆய்வையும் ஆவலையும் முன்மொழிந்த பாராட்டுக்குரியது.

"எங்கோமான் அடியார்கள் வாழி கோணை
ஊர் வாழி திருத்தம்பை நகரம் வாழி"
(தம்பை நகர்ப்படலம் - திரிகோணாசலபுராணம்.

திருச்சிற்றம்பலம்

படங்கள் நன்றி - ஜீவநதி இணையம்

# விருந்தோம்பல் எனும் ஒப்புயர்வற்ற சைவத்தமிழ் பண்பாடு

ஞாலம் வியந்தேற்றும் நற்றமிழ் பண்பாடு செயற்கரிய சிறப்புடைய பல பண்பாட்டம்சங்களை தன்னகத்துள் கொண்டு புதுமணம் கமழச்செய்கிறது. அத்தகு சிறப்புடைய பண்பாட்டம்சங்களில் பசித்திருக்கும் மானுடரின் பசிப்பிணியைப் போக்கும் விருந்தோம்பல் ஒப்புயர்வற்றது. உலகிலுள்ள பெரும்பாலான பண்பாடுகளின் ஒரு கூறாய் விருந்தோம்பல் இருப்பினும் கால வரலாற்றில் அந்த மிலாப்புகழை தமிழருக்கு அருளிச் செய்தமையே தமிழரின் விருந்தோம்பல் உலகமெங்கும் மெச்சப்படுந்தன்மையோடு திகழ்கிறது. சங்கத்தமிழிலக்கியங்களில் ஒன்றான நற்றிணையிலே,

**"அல்லி லாயினும் விருந்து வரின்"**

எனும் செய்யுள் விருந்தினர் எந்நேரத்திற்கு வந்தாலும், அவர்கட்கு இன்முகத்துடன் விருந்து பரிமாறும் தலைவியை சுட்டி நிற்கிறது. விருந்தினரான புதியவர்க்கு விருந்திடும் மாண்பை அகநானூற்றின்,

**"விருந்தின் மன்னர் அருருங்கலம் தெறுப்ப**
**வேந்தனும் வெம் பகை கனிந்தனை."**

எனும் செய்யுள் மூலம் அறியமுடியுமாயுள்ளது. தெய்வத் திருமறையாய் மேதினி எங்கும் தன் ஞான ஒளியை பரப்புகின்ற தமிழ் நூலாம் திருக்குறளில்

**"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமைந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்"**

இனிய முகத்தோடு இல்லந்தேடி வரும் விருந்தினரை உபசரிக்ககூடியவர் மனைதினில் மலர்மகளாம் திருமகள் மனமகிழ்வோடு வாசம் செய்வாள் என்பதும் தம்மிடம் இருந்ததைக் கொடுத்து மேலும் விருந்துள் விருந்தினர் அருவாதோ என எதிர்பார்த்திருப்பவள் மறுமையிலே தேவர்களால் உபசரிக்ப்படுவாள் எனும் பொருள் பட அமைகின்ற,


**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வாதை தவர்க்கு"**

அதாவது வந்த விருந்தினர்களை அன்பாக கவனித்து அனுப்பி விட்டு வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலில் காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள்.



தமிழரின் விருந்தோம்பல் உயர்வதற்கு அதனுள் பொதிந்திருக்கின்ற அறிவியல் வெளிப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அன்றைய நாட்களில் விருந்தோம்புவதற்கு வாழை இலையே பயன்படுத்தப்பட்டது. இயல்பிலேயே வாழையிலை உணவிலுள்ள நஞ்சுதன்மையை நீக்க வல்லதாகும். விருந்திற்கு வந்த விருந்தினருக்கு அடிசிலை சூட்டுடன் பரிமாறும் போது வாழையிலையில் இருந்து ிழடலிாநழெட எனும் சுரப்பி உணவோடு சேரும் போது விட்டமின்உ, சித்தரிக் அமிலம், கல்சியம், கரட்டின் போன்ற ஊட்டச்சத்துக்களும் கிடைப்பதால் உடலின் கலங்கள் சிதையாமல் இளமை நீடிக்கவும், புற்றுநோய், இதயநோய் வருவதை தவிர்க்கின்ற சத்தி வாழையிலையில் பரிமாறப்பட்ட அடிசிலுக்கு கிடைக்கிறது. இத்தகு சுட்சுமங்கள் நிறைந்த ஒப்புயர்வற்ற சைவ தமிழர் விருந்தோம்பலை கடைப்பிடித்து, கங்கைவார் சடைகரந்தார் அன்பர்க்கு அமுதிட்டு இறைவனின் திருவடிப்பேற்றை சிவனடியவர்கள் பலர் பெற்றுள்ளதை பெரியபுராணம் ஊடாக காணமுடிகிறது.

கடும் மழையிலும் இல்லந்தேடி வந்த சிவனுக்கு அமுதிட வயலில் விதைத்த நெல்லையும் வீட்டின் வரிச்சுகளை அரிந்து விறகாக்கிச் சமைத்து அமுதிட்ட பெருமை



இளையான் குடிமாற நாயனாரைச்சாரும், தன் மகன் மூத்த திருநாவுக்கரசு அரவந் தீண்டி உயிர்ட துறந்த வேளையிலும் விருந்தாளியாக வந்த திருநாவுக்கரசருக்கு அமுதிட முனைந்த அப்பூதியடிகள் குறிப்பிடத்தக்கவராவார்.

திருஞானசம்பந்தர் மயிலைக்கு சென்று இருந்தபோது பூங்கோதையை உயிர்ப்பித்தமை உலகறிந்ததே. பூம்பாவையை உயிர்ப்பிப்பதற்காக சம்பந்தர் அடியாருக்கு விருந்தோம்பி அமுது செய்தலும் சிவ விழாக்களை நடத்துவதும் உண்மையான சிவத்தொண்டுகளாயின் பூம்பாவை உயிர்பெற்றிட வேண்டும் என பொருள்படுமாறு,

**"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"**

பாடி கபாலீசுவரத்தில் மகேசுவரர்ட்கு சிவனடியார் திருவிழாவின் போது அமுது செய்விக்கின்ற அற்புதக் காட்சியை நீ காணாமல் சொல்வது முறையோ பூம்பாவையே என்பதை முன்முறுத்தி விருந்தோம்பலின் மாட்சிமையை சம்பந்தர் போற்றி இருப்பதையே அறியமுடிகிறது.

பித்தா என பிறைசூடனை விளித்த வன்றொண்டராம் நம்பியாருரர்க்காய் இறைவனை திருக்கச்சூரில் இல்லந் தோறும் இரந்து பெற்ற அடிசிலைக் கொண்டு இறைவன் விருந்திட்டான். திருக்குருகாவூரில் பொதிசோறும் நீரும் அளித்து விருந்தோம்பியதை பெரியபுராணம் போற்றி நிற்கிறது திருக்கருகாவூரில் சூலப்படைதாங்கியவன் பசிப்பிணி நீங்கச் சுவைமிகு அன்னம் படைத்து விருந்தோம்பிய மாண்பை சுந்தரர்,

**"இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம் பெருமான்**
**பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்**
**முத்தின மனிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த**
**வித்தககனே குரகாவூர் வெள்ளடை நயன்றே" போற்றிப் பரவுகிறார்.**

சங்கமருவிய காலத்தில் சைவமும் தமிழும் சிறக்க அளப்பிலா தொண்டாற்றியவர் பேயார் எனும் காரைக்காலம்மை என அழைக்கப்பட்ட இவரை இங்கு ஆட்கொள்வதற்காக சிவனடியார் போல் யாசித்தபோது அன்னத்துக்கு சேர்ந்துள்ள அடியவருக்கு எதை அளிப்பதென கலங்கியபடி, கணவனுக்கு என்று கொண்டுவரப்பட்ட மாங்கனி ஒன்றை கொண்டு விருந்தோம்பிய விதத்தை,

**"இல்லான் வைக்க எனத்**
**கம்பத்தால் முன்னிருந்த**
**நல்லநறு மாங்கனிகள்**
**இரண்டில் ஒன்றைக் கொண்டு**
**லில்பிரைந்து வந்தனைத்தது.**
**படைத்து மன கமிழ்ச்சியினால்**
**அல்லல் தீர்ப்பவர் அடியார்**
**தமை அமுது செய்வித்தார்"**

சொற்களில் சுவைபட பெரியபுராணம் கூறி நிற்பது



ஆலவாய் அமுதன்

திளைக்கதக்கது. சிவத்தொண்டாய் சிவனடியவருக்கு அமுதிடலை வழக்கமாய் கொண்டு ஈற்றில் சிவனடியார் போல் வந்த சிவபிரானாலே ஆட்கொள்ளபட்டவர் சிறுத்தொண்டர் ஈசன் அடியவராய் வந்து தமக்கு பிள்ளைக் கறிசோறு கேட்ட வேளையில் சிறுத்தொண்டரும் அவர் மனைமங்கலமுமாய் இணைந்து தம் புதல்வனை சீரான,

**"இனிய மழலைக் கிண்கிணிக் கால்**
**இரண்டும் மடியின் புடை இடுக்கிக்**
**துளிவாய் மைந்தன் கை இரண்டும்**
**கையால் பிடிக்கக் காதலனும்**
**நளி நீடு உவகை உறுகின்றார் என்று**
**மகிழ்ந்து நகை செய்யத்**
**தனிமா மகனைத் தாதையார் கருவி**
**கொண்டு தலை அரிவார்"**

பிள்ளைகறியாய் சமைத்த தன்மையைக் கூறுகிறது தேடிவந்தவர் வேண்டியதை அமுதிடல் வேண்டுமென்ற உணர்வு உந்தப்பெற்று, தலைச்சன் பிள்ளையை கறியாக சமைத்து, அடியவருக்கிட்டதால் ஈசனருளாள் அக்குடும்பமும், அவர்கள் இல்லப்பணிப் பெண்ணும் சிவலோகம் செல்லும் அருட்பேறை பெற்றமையானது விருந்தோம்பலின் எல்லையற்ற புகழிற்கு ஒரு சோறு பதமாகிறது.

இத்தனை பெருமைகளுடைய தமிழர் பாரம்பரியம் விருந்தோம்பல் இன்று மிகவும் அருகி போய்விட்டது. அடுத்தவர்களை உபசரிக்கும் பண்பு குறைந்து விட்டது. இன்றைய தொழில்நுட்ப உலகம், சமூக வலைத்தளங்கள் உறவுகளுக்கிடையான நெருக்கத்தை குறைத்து ஒற்றுமை இல்லாத போலியான வாழ்க்கையை ஒவ்வொரு மனிதர்களும் வாழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படையான உண்மையாகும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்று உலகுக்கு சொன்ன எம் இனம் இன்று நெறி தவறி போவது கண்டு மனம் வேதனை கொள்கிறது.

உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத வந்தோரை வரவேற்று உபசரித்து அனுப்பும் வழக்கம் தமிழர்களுக்குரியது. இது அடுத்தவர்களையும் அன்போடு உபசரிக்கும் சிறந்த பழக்கமாகும். பசியோடும் களைப்போடும் வருபவர்களுக்கு உணவளிப்பது உயர்ந்த புண்ணியம் என்கிறது மதங்கள். மண்ணில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உணவும் உடையும் வீடும் அழிப்பது தான் உயர்ந்த அறம் என்று போதிக்கிறது. "மணிமேகலை". வறியவர்கள், முதியவர்கள் பிறவிகுறைபாடு உடையவர்கள், அநாதையாக வீதியில் நிற்பவர்கள், நோயுற்றவர்கள் போன்றோருக்கு உணவழித்தல் ஆக சிறந்த அறம் என்கிறது மணிமேகலை.

அதாவது **"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"** என்றால் மிகையல்ல இப்பண்பை நாமும் உணர்ந்து நடப்பது சால சிறந்ததாகும்.

இவ்விதம் மாட்சிமை பொருந்திய சைவத்தமிழ் பண்பாட்டம்சமான விருந்தோம்பல் வரலாற்று சான்றுகள்



இன்னமும் உயிர்ப்புடன் மிளிர்கின்றது. இன்று உலகலாவிய ரீதியில் செறிந்து வாழும் தமிழர்கள் விருந்தோம்பலை பறைசாற்றும் தைத்திருநாளில் கதிரவனை எண்ணி வணங்குவது குறிப்பிடதக்கது. அத்தகு விருந்தோம்பலை நாமும் கடைப்பிடித்து அவனருளாலே அவனடியினை சேரும் பெரும் பேற்றினை பெறுவோமாக.

# தென்னாட்டு நிகழ்வுகள்



தென்னாடு தீக்கை நிகழ்வு





ஐம்பூதநாதர் பெருந்திருவிழா - திருவாதிரை அருட்காட்சி மற்றும் வீதி உலா



யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் புதிய சிவன் கோயிலுக்கான அடிக்கல் நாட்டல்





தென்னாட்டில் சைவ மாணவர் சபையின் பொங்கல் விழா

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதினாறாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு சுறவம் நல்லோரை தைத் திங்கள் 4ம் நாள் நிறைமதி அன்று (17-01-2022 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org